Registered as a Newspaper in Ceylon
விலை ச

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (17-5-66) இதழ் 99

பராபவ வைகாசி 4 பிறை முஹர்ரம் 25 செவ்வாய்க்கிழமை

## வேள்விப்பலி; இடைக்காலத் தடை

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை மாம்பிராய் வீதியில் அமைந்திருக்கும் வைரவர் ஆலயத்தில் இம்முறை வேள்விப்பலி நடைபெறக்கூடாதென இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்துஆலயத்தில் வேள்விப் பலியிடுவதைத் தடைசெய்யக் கோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு. குமரகுரு, ஆலய பரிபாலன சபைத் தலைவர் சார்பில் ஒரு மனுத்தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி வேள்விப் பலியை நிறுத்துவதற்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்தார்.

சென்ற வருடம் ஆலயத்தில் பலி தடைசெய்யப்பட்ட போதிலும் அருகாமையிலுள்ள மைதானத்தில் பலி கொடுக்கப்பட்டது.

# மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு

## விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாண மாநகரசபையின் வட்டாரங்களை விஸ்தரிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் விரைவில் ஆரம்பமாகுமென அறியப்படுகிறது.**

இப்பொழுது பதினேழு வட்டாரங்களைக் கொண்டுள்ள யாழ்ப்பாணம் மாநகரசபையின் வட்டாரங்களை இருபத்தியொன்றாக விஸ்தரிக்கவேண்டுமென மார்ட்டின் விசாரணைக் கமிஷன் சிபார்சு தெரிவித்திருந்தது. இந்தச் சிபார்சுகளின் அடிப்படையில் புதிய வட்டார எல்லைகள் பற்றிய படங்களை ஸ்தலஸ்தாபன அமைச்சின் படம்வரைபவர் இப்பொழுது தயாரித்துவருகிறார்.

## இலங்கை இந்திய கூட்டு தேயிலை சபைகள்

### மேற்கு நாடுகளில் அதிகம் திறக்கப்படும்

கொழும்பு, திங்கள்

நேற்று முடிவடைந்த இலங்கை-இந்திய தேயிலை கமிஷன் மகாநாடு உலக மார்க்கெட்டில் தேயிலை விலையின் வீழ்ச்சிபற்றி ஆராய்ந்தது.

இருநாடுகளும் இவ் விஷயத்தில் கூட்டாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென இணக்கம் தெரிவித்துள்ளன. தேயிலை ஏற்றுமதி சம்பந்தமான விஷயம் இரு தரப்பிலும் கவனமாக ஆராயப்பட்டது.

இம்மகாநாடு 3 தினங்கள் நடைபெற்றது. மேற்கு நாடுகளில் கூட்டாக மேலும் பல தேயிலைசபைகளைத் திறப்பதென இருநாட்டுபிரதிநிதிகளும் தீர்மானித்தனர்.

அடுத்த செப்டம்பர் மாதம் இலங்கை-இந்திய கமிஷனின் அடுத்தமகாநாடு இந்தியாவில் நடைபெறும் எனஅறிவிக்கப்பட்டது.

## முஸ்லிம், பறங்கி பிள்ளைகளின் போதனுமொழி

### சிங்களம் அல்லது தமிழாக இருக்கும்

கொழும்பு, திங்கள்

தற்பொழுது முஸ்லீம், பறங்கி பிள்ளைகளும், கலப்பு மணம் புரிந்துகொண்டவர்களின் பிள்ளைகளும் ஆங்கில வகுப்புகளிற் சேர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றது ஆனல் இனிமேல் இப்பிள்ளைகள் தமிழ் அல்லது சிங்களம் ஆகிய இரண்டில் ஏதாவது ஒரு மொழியில்தான் கல்வி பயிலவேண்டியிருக்கும். கல்விமந்திரி தயாரித்திருக்கும் புதிய கல்வி மசோதாக்கள் பாராளுமன்றத்தில் நிறைவேறியபிறகு மேற்குறித்த விதிகள் அமுலுக்கு வரவிருக்கின்றன என்று கல்விமந்திரி திரு. ஐ எம் ஆர் ஏ இரியகொல்லை இன்று அறிவித்தார்.

அடுத்த ஆண்டிலிருந்து ஆங்கில வகுப்புகளுக்கு மாணவர்கள் புதிதாக அனுமதிப்பது நிறுத்தப்பட்டுவிடும். முஸ்லிம் பிள்ளைகளும் பறங்கிப் பிள்ளைகளும், கலப்பு மணம் புரிந்தவர்களின் பிள்ளைகளும் ஆங்கில வகுப்புகளிற் சேர்ந்து படிக்கும் சலுகை இதுவரை இருந்துவந்துள்ளது. ஆனல் இனிமேல் சிங்களம் அல்லது தமிழ் வகுப்புகளில் மட்டுமே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள், எனவே தம்பிள்ளைகள் எந்த மொழியில் கல்வி பயிலவேண்டுமென்பதை இந்தப் பெற்றோர்கள் தெரிவுசெய்யவேண்டியிருக்கும். தனிப்பட்ட பாடசாலைகளும் கல்வி இலாகாவின் வசதிகளுக்குட்பட்டே செயல்படவேண்டியிருக்கும்.

கல்வி மசோதா நிறைவேறியபின்னர், பாடசாலைகளில் சிங்களம், தமிழ்ஆகிய இருமொழிகளில் மட்டுமே வகுப்புகள் நடக்குமென்றும் ஆனல் எல்லாப் பாடசாலைகளிலும் மூன்றும் வகுப்புகளுக்குமேல் ஆங்கிலம் இரண்டாவது அத்தியாவசியப் பாடமாகப்போதிக்கப்படும் என்றும் கல்விமந்திரி அறிவித்துள்ளார்.

## உயர்தர கல்வியை நிர்ணயிக்கும் வயது உயர்த்தப்படும்

### தமிழ் எம். பி. க்கள் கோரிக்கைக்கு அரசாங்கம் இணக்கம்

கொழும்பு, திங்கள்

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் 14 வயதடைந்ததும், அவர்களின் திறமையைக் கணித்து விவசாயம், பொறியியல், மருத்துவம் என்ற வகையில் எத்துறையில் சிறந்து விளங்குவார்களென்பதை அனுமானித்து அவர்களை உயர்கல்வி கற்க அனுமதிப்பது சம்பந்தமாகக் கல்விமந்திரி தமது புதிய மசோதாவில் தெரிவித்துள்ள யோசனைக்குத் தமிழ் எம். பி.க்களும், பிரமுகர்களும் கொண்டுவந்த கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஒரு மாணவன் எந்தத் துறையில் இறங்கினல் வெற்றிகரமாக விளங்குவானென்பதைக் கவனிப்பதற்கான வயது 14ஆக இல்லாமல் 18ஆக இருக்கவேண்டுமென்று தமிழ் எம். பி.க்களும், பிரமுகர்களும் அரசாங்கத்தைக் கேட்டிருந்தனர். இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் இப்பொழுது இணக்கம்தெரிவித்துள்ளது.

## பிரதமர் அளித்த தானம்

கொழும்பு, திங்கள்

இலங்கையில் நடைபெற்ற பௌத்த சங்க மகாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இன்று அலரிமாளிகையில் பிரதம மந்திரி 'சாங்கிக்க' தானம் வழங்கினர். 'சிங்கள பௌத்தயா' என்ற சஞ்சிகையின் பிரதிகளையும் பிரதமர் அவர்களுக்கு விநியோகித்தார்; பிரதிநிதிகளும் தங்களின் இலங்கை வருகையை நினைவுகூருமுகமாகப் பிரதமருக்குச் சஞ்சிகைகளை அன்பளிப்புச்செய்தனர்.

## துறைமுகத்துக்கு வெளியில் 5 கப்பல்கள்

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகம் மீண்டும் கப்பல்கள் நிறைந்து காணப்படுகின்றது.

துறைமுகத்துக்கு வெளியில் இப்பொழுது நிற்கும் கப்பல்களின் எண்ணிக்கை ஐந்தாகக் கூடியுள்ளது.

## இ.போ.ச. ஊழியருக்கு குடியிருப்பு வீடுகள்

கொழும்பு. திங்கள்

இ. போ. ச. ஊழியர்களுக்கான குடியிருப்பு வீடுகள்கட்டும்திட்டத்தின் அடிக்கல்லை நாட்டும் வைபவம் இன்று அனுராதபுரத்தில் குமிச்சைக்குளம் என்ற இடத்தில் நடைபெற இருக்கின்றது. இவ்வைபவத்தில் கலந்துகொண்டு தேசிய சேவைகள் மந்திரி அடிக்கல்லை நாட்டுவார்.

## தாய் மொழியா, பெற்றோர் விரும்பும் மொழியா?

### கல்வி போதனைபற்றி மறு பரிசீலனை

கொழும்பு, திங்கள்

தமிழ் மாணவர்கள் தமிழிலும், சிங்களமாணவர்கள் சிங்களத்திலும் கல்வி பயில வசதியிருக்கவேண்டுமென்ற தமிழ்பேசும் அரசாங்கக் கட்சி எம் பிக்களின் கோரிக்கைகள் பற்றி அனுதாபத்துடன் ஆலோசிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த வாரம் அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இவ்விஷயம் விவாதிக்கப்பட்டபோது இதுகுறித்து தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ், ஐக்கியதேசியக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த தமிழ் பேசும் எம் பிக்கள் அனைவரும் தமிழ்மாணவர்கள் தமிழிலும், சிங்களமாணவர்கள் சிங்களத்திலும் கல்வி பயில்வதற்கு வகை செய்யப்பட வேண்டுமென வற்புறுத்தினர்கள். இதுசம்பந்தமாகக் கல்விமந்திரி தயாரித்துள்ள மசோதாவில் ஒரு பிள்ளையின் கல்வி எந்த மொழியில் போதிக்கப்படவேண்டும் என்பதை பெற்றோர் தமது விருப்பப்படி தெரிவுசெய்யலாமென குறிக்கப்பட்டுள்ளது.

இந்த அம்சம் குறித்து தமிழ்பேசும் அங்கத்தவர்கள் கொண்டுவந்த [illegible] தங்கள் அரசாங்க[illegible] குழுக் கூட்டத்தில் [illegible] பான்மை வாக்குப்பலத்த[illegible] தோல்வியுற்றது. என்ற[illegible] தமிழ்பேசும் மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தாத விதத்தில் மசோதாவில் மாற்றம்செய்வது குறித்து இப்பொழுது அனுதாபத்துடன் மறுபரிசீலனை செய்வதற்குப் பிரதமரும், அரசாங்கக் கட்சியினரும் இணங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

## கோட்டை தொகுதி தேர்தல் வழக்கு

கொழும்பு, திங்கள்

கோட்டை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்சார்பில் திரு. ஸ்டான்லி திலகரத்ன போட்டியிட்டு வெற்றிபெற்றதை ஆட்சேபித்துத் தொடரப்பட்ட 2 வழக்குகளும் இன்று செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கை நீதிபதி திரு. எல். பி. டி. சில்வா விசாரணைசெய்தார்.

முறைதவறிய செல்வாக்கைப் பயன்படுத்தியதாகவும், பொய்த் தகவல்களைக் கொண்ட அறிக்கைகளை தயாரித்ததாகவும் இவ்வழக்கில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## துறைமுக வேலைகளை சித்தரிக்கும் சினிமாப்படம்

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறும் வேலைகளை முறையாகச் சித்தரிக்கும் சினிமாப்படம் ஒன்றைக் கொழும்பு துறைமுகக்கூட்டுத்தாபனம் தயாரிக்கஇருக்கிறது. இப்படம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் காண்பிக்கப்படும்.

ஒரு கப்பல் துறைமுகத்துக்குள் வந்தவுடன் அதிலிருந்து சரக்குகள் இறக்குமதி செய்யப்படுவது முதல் அக்கப்பல் துறைமுகத்தை விட்டு வெளியேறும்வரை நிகழும் சகல வேலைகளையும் இப்படத்தில் சித்தரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

விவசாய உதவியாளர்

விவசாய உதவியாளர் தேவை. பரீட்சையில் சித்தியற்ருேரும் விண்ணப்பிக்கலாம். சேதுநகர் தோட்டம், இலுப்பைக்கடவை. 349

தட்டெழுத்தாளர்
கட்டிட மேற்பார்வையாளர்

ஆங்கில தட்டெழுத்து தெரிந்த பெண்ணும், கட்டிட வேலை மேற்பார்வையாளரும் தேவை. விபரங்களுக்கு சப்ளேஸ் அன்ட் இன்வெஸ் மென்ஸ், 2-ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 346

நிருபர்கள்

'வெற்றிமுரசு' ஜூன் மாதம் முதல் மீண்டும் வெளிவருகிறது. நிருபர்கள் தேவை. விபரங்களுக்கு: மார்க்கண்டன் சச்சிதானந்தன் (ஆசிரியர்), வெற்றிமுரசு 'குருபவனம்' சாவகச்சேரி. 358

வீடு

வாடகைக்கு வீடு தேவை. சகல விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும். செ. பாலச்சந்திரா, 68, கனகரத்தினம் ரேட்டு, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். 359

## காணவில்லை

பையன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஐயாத்துரை என்பவருடைய மகன் தர்மதுரை [illegible]யது 16, சுன்னாகம் ஸ்கந்த[illegible]ரோதயாக் கல்லூரியில் [illegible]வகுப்பில் படிக்கும்மாண[illegible] சென்ற 3 நாட்களாக [illegible]டந் தெரியவில்லை. [illegible]க்குக் கடுமையான [illegible]மாக இருப்பதால், [illegible]யனைக்காணுவோர் கீழ்க்[illegible]ணும் விலாசத்திற்குத்தக[illegible]ல்கொடுக்கவும். ஆ. ஐயாத்துரை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. 357

கூப்பன்கள்

M792158——M 792167 பத்து அரிசி பங்கீடு புத்தகங்கள் போக்குவரத்தில் பலாலி ரேட்டில் காணுமற் போய்விட்டன. இதைவைத்திருப்பவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 355

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் நாவற்குழி ரெயில் ஸ்தானத்திற்கும் மாகாண களஞ்சிய சாலைக்குமிடையே கண்டி வீதியில் அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. குடிசையும் கிணறும் உண்டு. அங்கீகாரம்பெற்ற வீட்டுத்திட்டத்திற்கும் வானெலி உப நிலயத்திற்கும் கிட்டியது. யாழ்ப்பாணம் 10, முதலாம் குறுக்குத்தெரு, பிரக்கிராசியார் இராசதுரைக்கு மனுச் செய்யுக. 336

காணி

நாலுபரப்புச் காணி யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்குத் தெருவில் விற்பனைக்குண்டு. பிரக்கிராசியார் இராசதுரை, 10, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுச்செய்யுக. 335

காணி

உடுவில் கிராமசபை எல்லைக்குள் லவ்லேனில் (Love Lane) 9 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். சரவணமுத்து, யூனியன் பேக்கறி, சாவகச்சேரி. 332

## கல்வி

சங்கீதவகுப்பு

இராமநாதன் இசைக் கல்லூரி சுன்னாகம் - இக்கல்லூரியில் 1-6-66-லிருந்து ஆண்களுக்கும் வகுப்பு நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது. இந்த இருபிரிவான வகுப்புகளுக்கும் சங்கீதவித்துவான் A G. ஐயாக்கண்ணுதேசிகர் அவர்கள் பொறுப்பேற்றுநடத்துகிருர். மற்றய விபரங்கள் இசைக்கல்லூரி காரியதரிசி அவர்களை நேரில் சந்தித்து அறியவும். டாக்டர் சிவஞானரத்தினம், பொதுக் காரியதரிசி. 356

## வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பஞ்சக் கொடுமை

ராவல்பிண்டி, மே 16

ஒரிஸாரில் 1,75,00,000 பேர் பஞ்சத்திஞல் பாதிக்கப்பட்டிருப்பதாய் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.


கார், லொறி, றெக்டர், லோஜ், தண்ணீர் பம்
முதலியவற்றிற்கு
றீபோரிங், றீசிலிவிங், வால்(f) சீற் அடித்தல்,
வால்(f) சீற் வெட்டுதல், வால்(f) பேஸ் பண்ணுதல்
முதலியவற்றிற்கும்
கார், லொறி, றெக்டர்
ஆகியவைகளுக்கு
விசேஷ யந்திரங்கள் மூலம்
பிறேக் றம், பிறேக் லைன்,
கிளச் அசெஸ்மென்ட் செய்வதற்கும்
மற்றும்
சகல விதமான
கடைச்சல் - புரி வெட்டுதல்
போன்ற வேலைகளுக்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!

**நோத் என்ட் மோட்டார் வேக்ஸ்**
( ஓட்டோமோமயில் என்ஜினியர்ஸ் )
291, ஸ்ரான்லி ரேட், — யாழ்ப்பாணம்.
( அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டிடம் )


## முத்தமிழ்மன்ற நிர்வாகிகள்

உடுப்பிட்டி, திங்கள்

தென்புலோலி இளங்கோ முத்தமிழ்மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. நா. கருணநிதி தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. செ. ஜெகநாதன், உபபோஷகர்: திரு. சு. [illegible]ங்கராசா, தலைவர்: திரு. வி. நாகேந்திரன், உபதலைவர்: திரு. நா. கருணநிதி, காரியதரிசி: திரு. சு. கணபதிப்பிள்ளை, உபகாரியதரிசி: திரு. சு. சிவபாதசுந்தரம், தனதிகாரி: திரு. வி. சி. மூர்த்தி, உபதனதிகாரி: திரு. த. மயில்வாகனம்.

வெள்ளவத்தையில்

## தீ அணைக்கும் உப நிலயம்

கொழும்பு, திங்,

தீ அணைக்கும் உப நிலயமொன்று வெள்ளவத்தையில் இம்மாதம் இறுதியில் நிறுவப்படவிருக்கிறது. புதிய இயந்திரத்துடன் இணைக்கப்படவிருக்கும் இந்நிலயத்தில் அம்புலன்ஸ் ஒன்றும் சேவையில் ஈடுபடுவதற்காக அமர்த்தப்படும்.

## பீடிப் புகையிலை உற்பத்தி அதிகரிப்பு

சுழிபுரம், திங்கள்

இப்பகுதியில் பீடிப்புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. கடந்த ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு பீடிப் புகையிலை உற்பத்தி நூற்றுக்கு எண்பது வீதம் அதிகரித்துள்ளது. இதனல் பீடிப்புகையிலையின் விலையில் மாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது எனத் தெரியவருகிறது.

## 5 சத முத்திரை தட்டுப்பாடு

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம், பண்ணுகம், சித்தங்கேணி, சங்கானை ஆகிய தபாற் கந்தோர்களில் 5 சத முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 5 சத முத்திரை தட்டுப்பாட்டால் அனேக தபால் அட்டைகள் போடமுடியாமல் இருப்பதாக இப்பகுதியிலுள்ள பலர் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்கள். முத்திரை தட்டுப்பாட்டிற்குரிய காரணம் என்னவென்பது தெரியவில்லை.

## பிரியாவிடை நடத்த தீர்மானம்

சுன்னாகம், திங்கள்

கந்தரோடைக் தமிழ் கந்தையா வித்தியாசாலை தலைமை ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர் சேவையில் நின்றும் இளைப்பாறுவதையிட்டு அவருக்கு ஒரு சேவைநலம் பாராட்டு விழாவை நடாத்த அவ்வூர் மக்கள் தீர்மானித்துள்ளனர்.

## தொழிற் சங்க பிரதிநிதி

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கியதேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய ஊழியர் தொழிற்சங்கத்தின் வடபகுதி பஸ் ஊழியர் சங்கப்பிரதிநிதியாக, முன்பு சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் [illegible] தொழிலாளர் சங்கத்தில் [illegible] திரு. ரி. குணரத்தினம் நியமிக்கப் பட்டுள்ளார்.

## இந்து பல்கலைக் கழக கோரிக்கை

கொழும்பு, திங்கள்

இந்து கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதற்காக இந்து பல்கலைக் கழகமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை சீக்கிரத்தில் எடுக்கும்படி, கல்வி மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம், தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸின் கமிட்டி கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு: யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் தமிழாசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக தமிழ் ஆசிரிய தொழிற் சங்கங்களின்வேண்டுகோளை. ஏற்றதற்காக நாங்கள் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். . இரிய கொல்லைக்கு நன்றிதெரிவிக்கின்ருேம்.

பழைய அரசாங்க ஊழியர்களின் நியாயமான உரிமைகளையும், மந்திரி சபையின் தீர்மானங்களையும், செயல்படுத்துவதில் காலதாமதமாவதையிட்டு இச்சங்கம் அதிருப்தி கொள்கிறது. இச்சமயத்தில் நிதிமந்திரியை தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறது.

## வானெலியில் தேசிய ஒற்றுமை

கொழும்பு, திங்கள்

'இலங்கை வானெலிப்பகுதியினர் தேசிய ஒருமைப்பாட்டிற்குரியவகையில் ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கவேண்டும் தற்பொழுது சாதி, பாஷை, அடிப்படையில் பலவித்தியாசங்கள் இருக்கின்றது' என்று வானெலி கமிஷன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நூல்நிலயங்கள் நிறுவ முயற்சி

கொழும்பு, திங்கள்

கலாச்சார இலாகாவின் உதவியுடன் ஸ்தலஸ்தாபன இலாகா மாகாணங்களில் பல நூல்நிலயங்களை நிறுவுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

இப்படி நிறுவப்படும் நூல்நிலயங்களை உள்ளூர் ஆட்சி மன்றங்களின் பொறுப்பிலேயே விட ஸ்தலஸ்தாபன இலாகா முடிவு செய்துள்ளது.

## தனிநாடே என் மூச்சு

அமிர்தசரஸ், மே 16

தனிநாடு கோரிக்கையை தாம் கைவிடமுடியாது என்றும், ஹிந்துக்களைப்போல் தாங்களும் தனிநாடு கொண்டிருக்க வேண்டும என்றும் சீக்கியத் தலைவர் மாஸ்டர் தாராஸிங் அறிவித்தார்.


# விளம்பரம்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

யாழ். கிளை ஆண்டு விழா 1966

காலம்: 18-5-66

இடம். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்.

பிரதம விருந்தினர். திரு. வி. சங்கரலிங்கம் பீ. எஸ். சி. (டிப்புளோமா) கல்வி அதிகாரி திருக்கோணமலை.

நிகழ்ச்சிநிரல்

காலை 9-12 பழைய மாணவர் Vs பள்ளிமாணவர் கிரிக்கெட் ஆட்டம். 12--1-30 மதிய விருந்து. 2--300 வருடாந்த பொதுக் கூட்டம். 3--3-30 அதிபரின் தேநீர் விருந்து. 3-30 விரிவுரைகள். திரு. என். எஸ். கந்தையா பீ. எஸ். சி. இ போ. ச. போக்கு வரத்து அதிகாரி. திரு. வி. தருமலிங்கம் (பா. உ) உடுவில், திரு. சி. சுப்பிரமணியம் பீ. ஏ. இளைப்பாறிய அதிபர்.

நன்றி நவிலல்: திரு. வ. பொன்னம்பலம் எம். ஏ.

தவருது சமூகந்தருமாறு வேண்டிக் கொள்கிருேம்.

பொ. நாகரத்தினம்
421 செயலாளர்.


## ஹங்கேரிக்கு மேத்தா தூது

புதுடில்லி, மே. 16

இந்திய திட்டமந்திரி அசோக்மேத்தா ஹங்கேரியின் அழைப்புக் கிணங்க அங்கு செல்கிருர். திட்ட உதவி குறித்து அவர் ஹங்கேரியத் தலைவர்களுடன் பேசுவார்.

## அரிசி ஒப்பந்தம் பூர்த்தி

கொழும்பு, திங்கள்

இவ்வாண்டு அரிசி வாங்குவதற்கான ஒப்பந்தங்களை உணவுப்பகுதி இலாகா கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரியவருகிறது. உணவுப் பகுதி இலாகாவிற்கு 950,000 தொன் அரிசி பொதுமக்களின் விநியோகத்திற்கு பங்கீட்டரிசித்திட்டத்தின்கீழ் தேவைப்படுகிறது.

## முதல் சந்திப்பு

கொழும்பு, திங்கள்

நீதிபரிபாலனசபையினரால் நிறுவப்பட்ட குவாசிஸ் நேற்று பதிவு அதிகாரி காரியாலயத்தில் முதல் முதலாகச் சந்தித்து இரண்டு [illegible]ணித்தியாலங்கள் வரை கலந்துரையாடினர். இவர்களின் அடுத்த கூட்டம் இம்மாதம் 25-ந் திகதி நடைபெறும்.


**லீவர் பிறதர்ஸ் (இலங்கை) லிமிடெட்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில், மேற்பார்வை செய்யும் ஒரு பெண்மணியின் தலைமையில், வீடு வீடாகச் சென்று எமது பொருட்களை விற்பனவு செய்வதற்கு கவர்ச்சியான இளம் பெண்கள் தேவை.

மனுச் செய்பவர்கள் முகவசீகரமும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சம்பாஷிக்கும் திறமையும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப் படுகிறவர்களுக்கு நாளொன்றுக்கு ருபா 7/- சம்பளமும் விற்பனையில் கொமிஷனும் வழங்கப்படும்.**

தயவு செய்து நேர்முகப் பரீட்சைக்காக மே மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிககு 'பாம்கோட்' டுக்கு வரவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டானுங்கில் ஊரடங்கு உத்தரவு: கீயின் துருப்புகள் நகரைபிடித்தன

## ஹியூ நகரை நோக்கி அரசாங்க துருப்புக்கள் முன்னேற்றம்

### படுநாச உள்நாட்டுப் போர் வரும் என பௌத்தர்கள் எச்சரிக்கை

சைகோன், மே 16

தென்வியட்னுமிய அரசாங்கத் துருப்புக்கள், வடக்கிலுள்ள பௌத்நர்களின் மத்திய கோட்டையான டானுங் நகரை மீட்டபின், அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு தனிப்பட்ட கோஷ்டிகளைத் தவிர நகர் முழுதும் அரசாங்கத் துருப்புக்களின் கட்டுப்பாட்டிலிருக்கிறது. இதற்கிடையில் பத்து அரசாங்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர். வீதிகளில் ராணுவம் ரோந்துவருகிறது. டானுங் இப்போது அமைதியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை ஏர்மார்ஷல் கீயின் துருப்புக்கள் டானுங்கை நோக்கி நகர்ந்த விபரம் ஏற்கனவே வெளியிடப்பட்டது.

அதேசமயம் மற்றோர் அரசாங்க எதிர்ப்பு ஸ்தலமான ஹியூவை நோக்கி அரசாங்கத் துருப்புக்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன அவர்களைத் தாக்கும்பொருட்டு ஹியூ விமான நிலையத்தைக் கிளர்ச்சித் துருப்புக்கள் பிடித்துக்கொண்டுவிட்டன எனினும் அரசாங்கக் கிளர்ச்சித் துருப்புகளுக்கிடையே அங்கு மோதல் ஆரம்பித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

டானுங் நகர் கைப்பற்றப்பட்டது, ஏர்மார்ஷல் கீ விளைவித்த ஒரு துரோக நடவடிக்கை என்றும், வியட்னுமில் படுநாச உள்நாட்டுப் போருக்கே அது வழிசெய்யுமென்றும் பௌத்த தலைவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வியட்காங்கியர்தான் இதனால் பலனடைவார்களென அவர்கள் மேலும் கூறினர்.

ஆனால் கம்யூனிஸ்ட் செல்வாக்கை ஒடுக்குவதே நமது நடவடிக்கைக்கான காரணமென பிரதமர் கீ அறிவித்தார்.

இதற்கிடையில் வடபகுதி ராணுத் தளபதி பதவிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக மற்றோர் செய்தி கூறுகிறது

தென்வியட்னுமில் வியட்காங்கியருக்கு எதிரான சண்டையில் அமெரிக்கத்துருப்புக்களுக்கும், அரசாங்கத துருப்புக்களும் 300 வியட்காங்கியரைக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

தலைநகர் சைகோனில் தொழிலாளர்கள் இன்று வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆலைத்தொழிலாளரை பொலிசார் தாக்கியதையடுத்து இந்த விளைவு ஏற்பட்டுள்ளது.

வடவியட்னுமில் நேற்று அமெரிக்க விமானங்கள் சகப்பிணவாய் ஒன்றைத் தாக்கிநாசப்படுத்தின.

## "டானுங் படையெடுப்பில் அமெரிக்கா கலக்கவில்லை"

### வியட்னுமின் புதிய நிலைகுறித்து ஜோன்ஸன் மந்திராலோசனை

வாஷிங்டன், மே 16

டானுங்குக்கு துருப்புகள் அனுப்பப்படுவதற்குமுன்,தென் வியட்னும் அரசாங்கம் அமெரிக்காவுடன் ஆலோசனை கலக்கவில்லை என ராஜாங்க இலாகா அறிவித்தது. டானுங் சண்டையில் அமெரிக்கத் துருப்புக்கள் ஈடுபடவில்லை என்றும் அது கூறியது.

வியட்னுமில் உருவாகியுள்ள புதிய நிலைமை குறித்து ஜனதிபதி ஜோன்ஸன் தமது உயர் ஆலோசகர்களுடன் மந்திராலோசனை நடத்தினர் வெளிநாட்டு மந்திரி ரஸ்க், பாதுகாப்பு மந்திரி மக்னமாரா, தென் வியட்னுமிலுள்ள அமெரிக்கத் தூதர் திரு. கெபொட் லாட்ஜ் ஆகியோர் வெள்ளைமாளிகையில் நடைபெற்ற இந்தஆலோசனையில் கலந்து கொண்டனர்.

வியட்னுமிய நிலைமை அமெரிக்காவுக்குக் கலகத்தையளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

### சமரச முயற்சி

அதேசமயம் தென்வியட்னுமிலுள்ள இரு பிரிவுத் தலைவர்களின் கருத்துவேற்றுமைகளைத் தீர்க்கப் பேச்சு நடத்துமாறு அங்குள்ள தனது அதிகாரிகளுக்கு அமெரிக்கா கட்டளையிட்டிருக்கிறது. இரு பகுதித் தலைவர்களுடனும் அவர்கள் தொடர்புகொண்டு, சுமுக நிலையை ஏற்படுத்த முயற்சிப்பார்களென அறிவிக்கப்பட்டது.

### 10000 பேர் ஆர்ப்பாட்டம்

நேற்று வாஷிங்டன் வெள்ளைமாளிகைக்கருகில் 10000 மக்கள் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையை எதிர்த்துஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலம் மாளிகையைக்கடந்து முடிக்க ஒன்றரை மணி நேரம் பிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்று பெண்ட்ஸயித்திலிருந்து கெய்ரோ திரும்பிய ரஷ்யப் பிரதமர் கொஸிஜினும், ஜனதிபதி நாஸரும் வியட்னும் பற்றிச் சம்பாஷித்தார்கள்

ஹானோயில் ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதரும், கினி தூதரும் அதிபர் ஹோசிமின்னை நேர்முறையில் சந்தித்துப் பேசியதாக அறிவிக்கப்பட்டது.

பிரிட்டனில்

## 62000 பேர் வேலைநிறுத்தம்

லண்டன், மே 16

நேற்று நள்ளிரவு 62000 பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல் மாலுமிகளின் வேலைநிறுத்தம் ஆரம்பமாகியது. இதன் காரணமாக 2500 கப்பல்கள் பாதிக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

வாரத்திற்கு 40 மணி நேர வேலை, வாரம் 15 பவுண் சம்பளம் கோரி இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

இந்தவேலைநிறுத்தம்பிரிட்டனின் வெளிநாட்டு வர்த்தகத்தை படிப்படியாகவே பாதிக்கும் எனக் கூறப்பட்டது.

## சர்வதேச ஹாக்கி முடிவுகள்

ஹாம்பர்க், மே 16

நேற்று இங்குநடைபெற்ற சர்வதேச ஹாக்கிப்போட்டித் தொடரில் இந்தியா, பிரான்சை 2—0 கோல்களால் தோற்கடித்தது.

பாகிஸ்தான், பெல்ஜியத்தை 1—0 கோலினால் தோற்கடித்தது.

ஹாலந்து கென்யாவை 2—0 கோல்களால் தோற்கடித்தது.

ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்தை 3—0 கோல்களால் தோற்கடித்தது.

பிரிட்டிஷ்—மேற்கு ஜெர்மன் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 2 கோல்கள் போட்டன.

## "மந்திரிகளுடன் ஆலோசிப்பேன்"

கோலாலம்பூர், மே. 16

ஜனதிபதி சுகர்னோவின் சமாதானப் பேச்சுப்பற்றி தாம் இறுதிமுடிவு செய்யுமுன், தமது மந்திரிகளைக் கலந்தாலோசிக்கப் போவதாய் மலேஷியப் பிரதமர் துங்கு ரஹ்மான் கூறினர்.

1963-ம் ஆண்டு மணிலா ஒப்பந்த அடிப்படையில் இப்பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என இந்தோனேஷியா கூறியிருக்கிறது.

## ஹிந்துமகாசபைக்கு 50 வயது

குவாலியர், மே 16

அகில இந்திய ஹிந்துமகாசபையின் 50 ஆண்டு நிறைவையொட்டிய தங்க விழாக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சீன—பாகிஸ்தான் அபாயம்பற்றி எச்சரிக்கப்பட்டதுடன், இந்தியா அணுகுண்டு உற்பத்தி செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டது.

## 400 விளையாட்டு ரசிகர்கள் மயங்கி விழுந்தனர்!

லிவர்பூல், மே 16

இங்கிலீஷ் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்த எவர்ட்டன் கோஷ்டிக்கு நேற்று லிவர்பூல் நகரமண்டபத்தில் அளிக்கப்பட்ட உபசாரத்தின்போது 400 பேர் மயங்கி விழுந்தனர்.

வெற்றிபெற்ற கோஷ்டியைக் காண மண்டபத்துக்கு வெளியே 5 லட்சம் மக்கள் கூடியதால் ஏற்பட்ட பெரு நெரிசலே இதற்குக் காரணம்.

20 பேர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். நெரிசல் காரணமாக தடைச் சுவர்களில் பலர் மோதுண்டனர்.

(2)

மணிலாவில் முடிவடைந்த 8-வது ஆசிய யுவர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் தலா ஒரு கோல் விதம் போட்டு இஸ்ரேலும் பர்மாவும் கூட்டு வெற்றிபெற்றன,

## ராணுவத் தளபதி போல் இருக்க விரும்பினர்

### ஸ்டாலினின் அந்தநாள் பற்றி வருணனை

மாஸ்கோ, மே 16

முன்னாள் ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலின் 40 வயது நிறைந்த புரட்சிக்காரராக இருந்தபோதே ஒரு ராணுவத் தளபதியைப் போல், தாம் நடத்தப்பட வேண்டும் என விரும்பினர்.

ஸ்டாலின் ஒரு ராணுவ வீரர் அல்லவாயினும் அவர் அப்படியிருக்கவே விரும்பினர் என்றும், அவர் புன்னகை பூக்கமாட்டார் என்றும், கையை தொப்பி வரை தூக்கியே வணக்கம் தெரிவிப்பார் என்றும் லெனின் கிராட் பத்திரிகையொன்று பழைய ஸ்டாலினைப்பற்றி எழுதியிருக்கிறது. லியோண் டிரகோவ்ஸ்கி என்பவர் 1917-ம் ஆண்டு சிவில் புரட்சிபற்றி எழுதியுள்ள ஞாபகார்த்தத்தில் இந்த விபரங்கள் காணப்படுகின்றன.

வாயில் பைப்பைவைத்துக்கொண்டு மூலைக்குமூலை அலைந்து கொண்டிருப்பாராம் ஸ்டாலின்.

''இரவு நேரங்களில்வேலை எதுவுமில்லாவிட்டால் ராணுவ ரயிலிலுள்ள தனி அறையில் அவர் படுத்து கொண்டு ஒரு குழந்தையைப்போல் புத்தகங்கள் படிப்பார். எப்போ[illegible] தகங்களை விரும்பி[illegible] லின் ஏராளமாகப் [illegible] தார்'' என்றும் ஸ்டாலின் 'அந்தநாட்கள்' பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(பி டி ஸி)

## இரு இந்திய மந்திரிகள் உலகச் சுற்றுலா

### 4-ம் திட்டத்துக்கு பல நாடுகளை அணுகுவர்

புதுடில்லி, மே 16

இந்திய நிதிமந்திரி திரு. சசீந்திர சௌத்திரி அடுத்த மாதம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்து, இந்தியாவின் 4-ம் திட்டத்திற்கான உதவி குறித்து சிலமேற்கு நாடுகளுடன் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்படுகிறது.

நடப்பு ஆண்டுக்கும், 4-ம் திட்ட காலத்திற்கும்கிடைக்கக்கூடியஉதவியை ஆராயச் செல்லும் அவர், எப்போது செல்லுவார் என்னும் விஜயம் ராஜீயத்தொடர்பு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. ஜப்பானுக்கும் அவர் விஜயம் செய்வார்.

அதேசமயம் திட்டமந்திரி அசோக்மேத்தா ஜூன் 15-ம் திகதி மாஸ்கோவுக்கும், பின்பு ஹங்கேரிக்கும் செல்கிறார்.

இரு இந்திய மந்திரிகளும் தங்களுடன் நிபுணர்கள் கோஷ்டிகளை இட்டுச் செல்கிறார்கள்.

இதற்கிடையில் உதவிக் குழுவின் சார்பாக உலக வங்கி தூதுகோஷ்டி ஒன்று, வருகிறஅக்டோபர்- நவம்பர் மாதங்களில் இந்தியா வரவிருக்கிறது.

பார்லிமெண்டினல் அங்கீகரிக்கப்பட்டபின் 4-ம் திட்டத்தை உலக வங்கி தூது கோஷ்டி பரிசீலனை செய்யும் 1966/67-ம் ஆண்டுக்கு உலகவங்கி 160 கோடி டாலர்வழங்கும் எனத்தெரிகிறது ஜூலைமாதம்சரியான தொகை அறிவிக்கப்படும்.

பி. டி. ஐ.

14 மொழிகளில்

## குருகோவிந்தரின் நூல்கள்

பாரிஸ், மே 16

குருகோவிந்தசிங்கின் நூல்களை ரஷ்ய, பிரெஞ்சு, ஜெர்மன் உட்பட 14 மொழிகளில் பெயர்க்க ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சா ஸ்தாபனம் முன்வந்திருக்கிறது.

## இந்தோனேஷியா

ஜாகர்த்தா, மே 16

சர்வதேச உபகார நிதியில் மீண்டும் சேர இந்தோனேஷியா முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

## பிரஸல்ஸில் நேட்டோ அகம்

வாஷிங்டன், மே. 16

'நேட்டோ'வின் அரசியல், ராணுவ தலைமையகங்கள் பிரான்சிலிருந்து அகற்றப்பட்டபின், அவற்றை பெல்ஜியத்தில் நிறுவ அமெரிக்கா ஆதரவளிக்கும் எனக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மக்கள் சமூகத்துக்கு வேண்டியதை இயற்கை அன்னை தருகிருள். அவனவனுக்குவேண்டியதை அவனவன்-அந்த அளவில் மட்டுமே எடுத்து வாழ்ந்தால், இந்த உலகில் பிச்சை எடுக்கும் ஏழைகள் இருக்க மாட்டார்கள். யாருமே பசியால் சாகமாட்டார்கள். — மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 387

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 4 உ (17-5-66)

## ஆசிய அமைதிக்கு ஆபத்து

"பெரிய காரியங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது" என்ற தலைப்புடனே நமது ஆங்கில சகவர்த்தமானியான "டெயிலி நியூஸ்" இந்தியா-பாகிஸ்தான் ஒத்துழைப்பின் அவசியத்தை வற்புறுத்தி ஒரு முக்கியமான தலையங்கம் எழுதியுள்ளது. "டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்பட்டபின் இந்தியா-பாகிஸ்தான் உறவுகள் மேம்படுவதற்கு பதிலாக நிலைமை மோசமாகிவிடுகின்றது. இருநாடுகளுக்கு எல்லைப்புற நெருக்கடி அதிகரித்துள்ளது. எந்த நிமிஷமும் யுத்தம் மீண்டும் கிளம்பிடவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது" என்று கருத்துப்பட எச்சரித்து குறுகிய தேசிய விஷயங்களை விட தென்கிழக்கு ஆசியாவின் அமைதியே அதிக முக்கியமானதென்றும், சீன-அமெரிக்க யுத்தக் குமுறல்கள் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் வேற்றுமைகளை வளர்க்காமல், அதிக ஒற்றுமையாக இருந்து, இப்பகுதியின் அமைதியைப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமென் [உறுதி]யாக அறிவுறுத்துகிறது. சமாதானப் பிரியர்கள் இக்கருத்தைப் பூரணமாக ஆதரிப்பர்.

ஆத்திரமூட்டும் செயல்கள் செய்யப்படுகையில், தேசிய பாதுகாப்புக்கு மாறான காரியங்கள் நடக்கையில், ஒரு நாடு பொறுமையாக இருப்பது 'டெயிலிநியூஸ்' கூறுவதுபோல் சுலபமல்லதான். ஆனல் பல ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கும் அரசியல் விடுதலை பெற்றுத் தர உதவியவர்களுக்கு இப்பகுதிகளிலே அமைதியைக் காக்க வேண்டிய பெரிய பொறுப்புமுண்டு. மேலும் இவ்விரு நாடுகளும் யுத்தத்தை விரும்பவில்லை. அமைதியைப் பாதுகாத்து. பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்பதே இருநாடுகளின் கவலை என்பதில் சந்தேகமில்லை. அதனுலேயே இருநாட்டுப் பிரதமர்களும் டாஷ்கண்டில் கூடி, ஒரு சமரசத்தைச் செய்து கொண்டதுடன் மற்றப் பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்த்துக்கொள்ளலாமென்றும் நம்பிக்கை தெரிவித்தன. அந்த நம்பிக்கை நிறைவேருமல், இரண்டு நாடுகளுக்கும் வாய்ச்சண்டை ஏற்பட்டு இரண்டும் யுத்த முஸ்தீபுகளைச் செய்து வருவது துரதிருஷ்டவசமாகும்.

பாகிஸ்தான் தனது இராணுவச் செலவில் மேலும் 115 கோடி உயர்த்தியிருப்பதாகவும், இந்தியா 30 கோடிதான், அதுவும் பஞ்சப்படி உயர்வுக்காக அதிகமாகச் செலவழிப்பதாகவும் இந்திய அமைச்சர் அசோக் மேத்தா அமெரிக்காவிடம் தெரிவித்திருக்கிருர். பாகிஸ்தான் இது பற்றி வேறு ஏதாவது சமாதானம் சொல்லக்கூடும். அது எப்படியாயிலும், பொருளாதாரச் சங்கடங்களால் அவதியுறு, பிறநாடுகளிடம் உதவி கோரும் இந்தியாவும், பாகிஸ்தானும் இராணுவத்துக்காக அதிகம் செலவிடுவது எவ்விதத்தும் தகாது. இரண்டுக்கும் தற்கொலை சண்டையை மூட்டிவிட்டு, இரண்டும் அமைதிகெட்டு நாசமடைய வேண்டுமென்று சில வெளிச்சக்திகள் இருப்பதை இரு தேசத்தவரும் மறுப்பதற்கில்லை.

பேச்சுவார்த்தைகள் மூலம் தீரமுடியாத பிரச்னையே கிடையாது நல்லெண்ணம் மட்டும்இருப்பின் எந்தச் சங்கடமான பிரச்னையையும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து தீர்த்துக்கொள்ளமுடியும் இதே சமயம்யுத்தத்தால் எந்தப் பிரச்னையும் தீராது. தீருவதற்குப் பதில் அதிக சங்கடங்களையும் சிக்கல்களையுமே ஏற்படுத்தும். இரு நாடுகளிலுமுள்ள அரசியல் ஞானிகளும் இதைநன்கு உணர்வர். இந்தோனேஷியாவுக்கும், மலேஸியாவுக்கும் கூட சமரசப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவாம். ஆகவே, இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் நேரில் கலந்து பேசி, இரண்டும் தங்கள் பிரச்னைகளை சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள முற்படவேண்டும். அவசியமாயின் ரஷ்யாவின் உதவியை மீண்டும் நாடலாம்.

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்ததுபோல் நமக்குச் சுதந்திரம்கிடைத்துள்ளது. கிடைத்தற்கரிய இச் சுதந்திரத்தை மக்களின் சுபிட்சத்துக்காகவும், ஆசிய-ஆபிரிக்க மக்களின் புதிய ஒத்துழைப்புக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் உலகசமாதானத்துக் காகவும் பயன் படுத்த வேண்டியிருக்க, நமக்குள்ளாகவே தற்கொலைச் சண்டைகளில் ஈடுபடுவது அறிவுடைமையாகுமா? இவ்விரு நாடுகளுக்கும் மீண்டும் யுத்தமேற்படுமாயின், இன்றையநிலையில்ஆசியா அனைத்தும் யுத்தத்தீ பரவி, இலங்கை உள்ளிட்டு பல ஆசியநாடுகளும் பெற்ற சுதந்திரத்தை இழந்து பெரும் நாசத்துக்கும் உள்ளாக நேரிடும். ஆகவே ஆசியாவின் அமைதியையும் நன்மையையும் கருதி, இந்தியா-பாகிஸ்தான் தகராறுகள் சுமுகமாகத்தீர, இலங்கைபோன்ற ஆசிய நாடுகள் தங்களாலான எல்லா சமாதானமுயற்சியையும் செய்வது அவசியமாகும்.

## தமிழ் - போத்துக்கீச மொழித் தொடர்புகள்

— வி. என். பி. —

இற்றைக்கு சரியாக 468 ஆண்டுகளுக்கு முன்பு (17-5-1894) வஸ்கோட காமா என்ற போத்துக்கீசர்தென் ஆபிரிக்கமுனையை வலம் வந்து இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே நேரடியான கடல் தொடர்பைக் கண்டுபிடித்து தென்னிந்தியாவிலுள்ள கோழிக்கோடு (பின்னர் கலிக்கட், கள்ளிக் கோட்டை) என்னுமிடத்தைச் சேர்ந்தான். இவனுக்குப் பின் வந்த போத்துக்கீசரில் லொறன் கோடி அல்மெயிடா என்பவன் 1505-ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்து சேர்ந்தான். சிறிது சிறிதாக இவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். இவர்களுடைய தொடர்பால் தமிழ் சொற்கள் சில போர்த்துக்கீச மொழியிலும் பின்னர் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் புகுந்து இன்னும் வழக்கில் உள்ளன. அதுபோலவே சில போர்த்துக்கீச சொற்களும் தமிழ் மொழியில் சேர்ந்து கொண்டன.

இதுபற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடத்திய ஹாவாய் பல்கலைக்கழகத்து ஐரோப்பிய மொழி பேராசிரியர் ஈ. சி. நோல்டன் மலாயா தமிழாராய்ச்சி மகாநாட்டின் கருத்தரங்கில் தமது கண்டுபிடிப்புகளை வெளியிட்டார்.

சுத்த தமிழ்ச் சொற்களான வெற்றிலை, கயிறு, மாங்காய், கறி, பறையன். சுருட்டு, கூலி, கட்டுமரம், மிளகு, தண்ணீர் முதலியன போத்தக்கீச மொழி மூலம் சில ஐரோப்பிய மொழிகளிலும் முக்கியமாக ஆங்கிலத்திலும் முறையே 'பீற்றில், கொயர், மாஸ்கோ, கறி, பறையா, செருட், கட்டமரன், முல்லிகரண்ணி' என்று வழங்குகின்றன.

தண்டயால் (ரிண்டால்), தேக்கு (ரீக்), கொப்பரா (கொப்ரா) முதலிய சொற்களும் பிற மொழிகளில் கலந்துள்ளன.

பூ, காய், பழம் எதுவும் இல்லாத வெறும் இலைக்கொடி வெற்றிலை என்று தமிழரால் அழைக்கப்பட்டது. இதுவே போத்துக்கிசிலும் ஆங்கிலத்திலும் 'பீற்றில்' என வழங்குகிறது.

தென் அமெரிக்காவில் 30 அடி நீளமான ஒரு மலைப்பாம்பு இருக்கிறது. அதற்குப் பெயர் 'அளக்கொண்டர்,' இது 'ஆனை கொண்டான்' என்ற தமிழ்ப் பெயரிலிருந்து வந்திருக்கிறது என்று பேராசிரியர் நோல்டர் கூறுகிருர், 'ஆனை கொண்டான்' என்பது யானையையும் விழுங்கக் கூடிய பாம்பு என்று அர்த்தமிருக்கலாம்.

போர்த்துக்கீச சொற்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வித்தியாசப் படுகின்றன, உதாரணமாக, அலவாங்கு இந்தியாவில் கட்டப்பாரை என்று வழங்குகிறது, கதிரை பெரும்பாலும் நாற்காலியாகவே இந்தியாவில் குறிப்பிடப்படுகிறது.

கண்ணும்பு, கொட்டை, கூனி, கட்டையன், கட்டில், உடுப்பு, முருங்கை, சிப்பி, கூடை, பெட்டி, தொட்டில் முதலிய தமிழ் சொற்களும் போத்துக்கீச மொழியில் காணப்படுகின்றன.

போத்துக்கீசத்திலிருந்து தமிழ் கடன் வாங்கியசொற்கள் பல முக்கியமாக, மேஸ்திரி, மேசை, பாதிரி, சாவி, சன்னல், அன்னுசி என்ற சொற்களைக் கூறலாம். இவற்றைத் தவிர இன்னும் சுமார் 120 சொற்கள் போ

(5-ம் பக்கம் பார்க்க)



## ஆசிரியருக்கு கடிதங்கள்

### பாடசாலை பஸ் சேவை

யாழ்ப்பாணப் பகுதியில் பாடசாலை பஸ் சேவைகள் சரியான முறையில் அமுல் நடத்தப்படாததால்மற்றும் பிரயாணிகள் அதிக கஷ்டத்துக்குள்ளாகின்றனர் சரியான நேரத்தை அறிந்து பாடசாலை பஸ்களை சேவைக்கு விடாததால் சாதாரண பஸ்களிலும் மாணவர்கள் பிரயாணம் செய்கின்றனர். சாதாரண பஸ்களில் கடமையாற்றும் கண்டக்டர்கள் மாணவர்களுக்கே முதலிடமளிப்பதால் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், நோயாளிகளும், வர்த்தகர்களும் நேரத்திற்குச் செல்லமுடியாமல் இருக்கின்றது. அதே நேரத்தில் பாடசாலைசேவை பஸ்கள் பெரும்பாலும் காலியாகவே செல்கின்றன.

இதனை இ. போ. ச. அதிகாரிகள் கவனித்துச் சரியான நேரத்திற்குப் பாடசாலை பஸ்களைச் சேவைக்கு அனுப்பினுல் மற்றும் பிரயாணிகளின் பிரயாணக் கஷ்டமும் நீங்கும்.

சி. எம். எஸ். ஸ்ரீகணநாதன்
'தமிழகம்', கொடிகாமம்.

### துறைமுகம் திறக்கப்படுமா?

நெடுந்தீவுக்கும் புங்குடுதீவுக்கும்இடையேபிரயாண வசதியை ஏற்படுத்துவதற்காகப் பெரும் தொகையானபணச்செலவில் அமைக்கப்பட்ட குறுகட்டுவான் துறைமுகம் 'திறக்கப்படும்' என வதந்திகள் அடிக்கடி எழுப்பப்படுகின்றன. ஆனல் இத்துறைமுகம் திறக்கப்படாது போய்விடுமோ என்ற அச்சம் இங்கு இப்போ நிலவிவருகிறது. இத்துறைமுகம் இறக்கப்படுமேயானுல் நெடுந்தீவுப் பிரயாணிகளுக்குப் பெரும் வசதியை ஏற்படுத்தியதாக இருக்கும்.

1935-ம் ஆண்டில் இருந்தே ஆரம்பித்தமோட்டார் வள்ளச்சேவையிலும்பார்க்க எதுவித திருத்தமோ முன்னேற்றத்தையோஇச்சேவை இன்றுவரை அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விஷயத்தில் இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவார்களா?

என். தர்மலிங்கம்
நெடுந்தீவு.

(5-ம் கலத் தொடர்ச்சி)

தொண்டு ஆற்றுமென்றே நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

ஆசை வன் பாசம் எய்தி அங்குற்றேன் இங்குற்றேனய், ஊசலாட்டுண்டு வாளா உழந்து நான் உழிதராமே, தேசனே தேசமூர்த்தி திருமறைக்காடுமேய, ஈசனே உன்றன் பாதம் ஏத்துமா றருள் எம்மானே.

—அப்பர் சுவாமிகள்.

## ஐயாறன் எழுதுகிறது

ஒரு விழாவிலே ஓரன்பர் தமிழ்த்தாய் வணக்கம் பாடினூர். எல்லாரும் எழுந்து நின்றனர். என்ன பாட்டு தெரியுமா? மனேன்மணியத்திலே சுந்தரம்பிள்ளை "ஆரியம் போல் வழக்கு ஒழிந்து, அழிந்து" தமிழ் கெடவில்லை என்று பொருள்படப்பாடியது தான்.

தமிழை உயர்த்துவதற்காக, ஆரியத்தைத் தாழ்த்த வேண்டியதுதானு? ஆரியம் உண்மையில் வழக்கு ஒழிந்து அழிந்துவிட்டதா என்று என் மனதில் பல கேள்விகள் எழுந்தன. மல்வத்தை மகாநாயக தேரோ யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த போது முதலில் விமான நிலையத்தில் வரவேற்றது சமஸ்கிருதத்தில்தான். நயினதீவு கோவிலிலே குருக்கள் ஆரிய மொழியில் வரவேற்றது மகாநாயகாவின் உள்ளத்தை நெகிழச் செய்தது.

இப்போது ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சதர் ஆகாசவாணியிலேபாகவதக் கதைகளை, சம்ஸ்கிருத மூலத்துடன் 'பிரவசனம்' செய்கின்றர். எவ்வளவு உருக்கம், எவ்வளவு கம்பீரம்! இதையெல்லாம் பார்க்கையில், ஆரியம் வழக்கொழிந்து, அழிந்துவிட்டதென்று யார்சொல்ல முடியும்?

ஃ ஃ ஃ

தெற்கே கதிர்காமம்முதல் வடக்கே கைலாசம் வரையில் பல கோவில்களிலும் சம்ஸ்கிருதத்தில் தான் பூஜை வழிபாடுகள் நடக்கின்றன இந்து சமயத்தை இணைக்கும் பொதுமொழி சமஸ்கிருதமாக உள்ளது. இந்து சமயத்தை மட்டுமன்றி பௌத்தத்தையும், பல ஆசிய நாடுகளையும் பிணைப்பதாகவுமுள்ளது அம்மொழி. தமிழுக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் விரோதமெதுவுமுண்டா? சிவபெருமானை "ஆரியம் தமிழோடிசையானவன்" என்கிருர் அப்பர் சுவாமிகள்.

இதைப்பற்றி அந்த அன்பரிடம் கேட்டபோது, தமக்குத் தமிழும், ஆரியமும் இரு கண்கள் போலென்றும் இரண்டையும் பயில்வதாயும் சொல்லி, அப்பாடலைப் பாடும்போது, இது பற்றியெல்லாம் தாம் சிந்திக்கவில்லை என்றும் ஒருவித வருத்தத்துடன் கூறினூர்.

ஃ ஃ ஃ

"முஸ்லிம் செய்தி" என்ற புதியதோர் வாரப்பத்திரிகை கொழும்பிலிருந்து இம்மாதம் முதல் வெளிவருகிறது. அதன் முதல் இதழ் கிடைத்தது அன்பர் பூபதிதாசரை நிர்வாக ஆசிரியராகக் கொண்டது இப்பத்திரிகை.

அன்பர் அவர்கள் பழம்பெரும் எழுத்தாளர், பத்திரிகாசிரியர் சமயசமரச மனப்பான்மை கொண்டவர், பல சமயத்தவர்களின் நட்பும் மதிப்பும் பெற்றவர். சமூகத்தொண்டர், அன்புமார்க்க சங்கத் தலைவர். அவரை ஆசிரியராகக் கொண்டு கொழும்பில் நடைபெறும் "முஸ்லீம் செய்தி"யை மனமாற வரவேற்கிறோம். அது ஒரு தினசரியாக வளர்ந்து முஸ்லீம் சமூகத்துக்கு நல்ல தொண்டாற்றுவதால் பல சமயத்தவரிடையிலும், சிறப்பாகத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவரிடத்தும் நட்பையும் நல்லெண்ணத்தையும் வளர்த்து, ஈழத்துக்கு நல்ல

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''உடனே வந்திருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்''

யாழ்ப்பாணம், செவ்

நுங்கு வெட்டுவதற்கு பனையில் ஏறியவர் கைதவறி நிலத்தில் வீழ்ந்து மரணமான சம்பவமொன்று வரணியில் நிகழ்ந்துள்ளது.

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த கணபதி கதிரனின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் முன்னிலையில் சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் மகன் கதிரன் கணவதி கூறியதாவது:-

எனது தகப்பனுர் நுங்கு வெட்டுவதற்கு எங்கள் வளவிற்குள் நின்ற பனையில் ஏறினுர். கைதவறி நிலத்தில் விழுந்த போதிலும் மயக்கமடையவில்லை. அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவில்லை. ஒட்டகப்புலத்திற்குக் கொண்டு சென்றேம். மூன்றும் நாள் நிலைமை மோசமாகவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசென்றேம். அங்கு அவர் மரணமானுர்.

உடனே கொண்டுவந்திருந்தால் அவர் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியுமென்றும் 3 நாட்கள் சென்றபடியால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாகவும், உள்காயங்களினுல் மரணம் சம்பவித்ததென்றும் டாக்டர் சாட்சியமளிக்கையில் கூறினுர். விபத்தினுல் ஏற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# நாடக நிகழ்ச்சி அவசியம்

கொழும்பு, திங்கள்

சிங்கள சங்கீதத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய எல்லாதவித நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இலங்கை வானெலி அக்கறை காட்ட வேண்டியது அவசியமெனக் கருதுகிறேம் என்று வானெலிக் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; சிங்கள கோஷ்டிகானத்திற்கு கூடிய நேரம் ஒதுக்கப்பட வேண்டும். சிங்கள நிகழ்ச்சிகளில் பழைய நாடகங்கள் இடம்பெற வேண்டும். ஒரே நேரத்தில் தேசிய ஒலிபரப்பிலும் வர்த்தக ஒலிபரப்பிலும், நடனநிகழ்ச்சிகள் இடம்பெறுவது அவசியமில்லை.

# 'தொழிலாளருக்கு 5000 வீடுகள்'

## மந்திரி திட்டம்

கொழும்பு, திங்கள்

துறைமுக தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய வீடமைக்கும் திட்டமொன்றை தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா அங்கீகரித்துள்ளார்,

இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு 5000 வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. வாடகைத் திட்டத்தின்கீழ் இவ்வீடுகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

# ஏற்பினுல் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

அழுகுசப்பாணி என்ற பூச்சி கடித்த ஆறுவயதுச் சிறுவன் பத்து நாட்களுக்குப்பின் ஏற்புண்டாகி மரணமான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது

பொன்னுத்துரையின் மகன் குலத்தின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி மரணவிசாரணை நடத்தினுர்.

பூச்சிகடித்து பத்துநாட்களின்பின் சிறுவனின் கழுத்தில் விறைப்பு ஏற்பட்டதாகவும் இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுரென்றும் மரணவிசாரணையின் போது கூறப்பட்டது. இயற்கை மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# மாநகரசபை எல்லைக்குள் புதிய போக்குவரத்து ஒழுங்கு!

யாழ்ப்பாணம், திங்கள்

போக்குவரத்துச் சம்பந்தமாக யாழ்ப்பாண மாநகர மண்டபத்தின் செயற்குழு அறையில் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது.

இம்மகாநாட்டில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

மகாத்மா காந்தி வீதியையும், சி. பொன்னம்பலம் வீதியையும், வெலிங்டன், ஸ்டான்லி வீதிச் சந்தியில் இருந்தும், விக்டோரியா வீதியை பலாலி வீதிச்சந்தியிலிருந்தும், ஆஸ்பத்திரி வீதியை மணிக்கூட்டுக் கோபுர வீதிச்சந்தியிலிருந்தும் சகல வாகனப்போக்குவரத்துக்கும் ஒரு வழிப்பாதையாக்குதல். ''போகப்படாது'' என்ற அடையாளப்பலகைகள் அமைக்கப்படவேண்டிய இடங்களை தலைமைக் காரியாலய பொலிஸ் பரிசோதகர் சுட்டிக்காண்பிக்க வேண்டும். ''போகப்படாது'' பலகைகளை அமைக்க மராமத்து அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சி. எஸ். கே. சந்தியில் இருந்து சிவன் பண்ணை வீதி வரை மாற்று முறையில் ஒருபக்க வாகன ஒதுக்கிடமாக்குதல். வாகன ஒதுக்கிடமாக ஒவ்வொரு பக்கத்தையும் பாவிப்பதற்குரிய நாட்கள், முறையே நான்கு நாட்களாகவும், மூன்று நாட்களாகவும் தினமும் காலை 8-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.

ஸ்டான்லி வீதியில் மாற்று முறையில் ஒரு பக்கவாகன ஒதுக்கிடமுறைறைச் செயலாக்கல் திங்கள், புதன், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் குளத்தின் பக்கமாகவும், ஏனைய நாட்களில் எதிர்ப்பக்கமாகவும் வாகன ஒதுக்கிடமுறை செயல்படுத்தப்படும்.

பிரதானவீதியில் தபர் வீட்டிற்கு அருகில்பஸ்நிறுத்தும் இடம் ஒன்றை நிறுவுவதென்றும், பரீட்சார்த்த அடிப்படையில், காங்கேசன் துறைவீதியில் சி எஸ் கே சந்திக்கும், அஞ்சல்நிலைய சந்திக்குமிடையில் ஒரு பக்க வாகன ஒதுக்கிடமுறையை அனுசரிப்பதென்னும், சி. எஸ் கே க்கு எதிரில் ஒரே நேரத்தில் மூன்று ராக்ஸிகளை நிறுத்தக்கூடியதாகஒரு ராக்ஸிநிலையத்தை ஏற்படுத்துவதென்றும்' முதலாம் குறுக்குத்தெருச் சந்தியிலிருந்து கண்டிவீதிச் சந்தி வரை ஆஸ்பத்திரிவீதிக்கு கல்லுப்பரவி தாரிடவேண்டும்,

குருநகர வீடமைப்புத திட்டப்பகுதிக்கு விளையாட்டு மைதானம், பூங்கா ஆகிய பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்த இடம் வேண்டியிருந்தால் கடற்கரைவீதிப் பக்கமாக மேற்கொண்டு எதுவித கட்டடங்களைத்தானும் அனுமதிப்பதில்லை, இரட்டைத் தட்டு பஸ்வண்டிகள் பாவிக்கக் கூடிய பாதைகளின் ஓரங்களில் உள்ள மரங்களின்கிளைகளைத்தறிப்பது. சிவன் கோவில் - காங்கேசன்துறை வீதிச்சந்தியில் பெயர்ப் பலகைகள் நிறுவுதல்.

இம் மகாநாட்டில் உதவி மேயர் திரு. சே. வி தெய்வேந்திரன், பொது மராமத்து இன் ஜினியர் திரு. எஸ் நடேசன், இ.போ.ச. பிரதேச முகாமையாளர் திரு. கே.ஏ. வேலுப்பிள்ளை, பொலிஸ் தலைமைகாரியாலய பரிசோதகர் திரு. வி. கே. கந்தையா, மாநகர சபை மராமத்து அத்தியட்சகர் திரு. ஏ. செல்லத்துரை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்வ கொண்டனர். (ந நி.)

# ஸ்கந்தா பழைய மாணவர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளை ஆண்டு விழா 18-ந் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டியுடன் ஆரம்பமாகும்.

பிரதமவிருந்தினராக திருமலை கல்வி அதிகாரி திரு. வி. சங்கரலிங்கம் கலந்து கொள்கின்றுர்.

மதிய விருந்திற்குப் பின்னர் வருடாந்தப்பொதுக் கூட்டம் இடம்பெறும் மாலை 3-30 மணி தொடக்கம் விரிவுரைகள் இடம்பெறும். திருவாளர்கள்: என். எஸ். கந்தையா, வி தர்மலிங்கம் (பா. உ.), சி. சுப்பிரமணியம் ஆகியோர் ரிவுரை நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

# கூட்டுவிசாரணை

பெர்லின், மே 16

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அட்டோர்னி ஜெனரல் அலுவலகம் விடுத்த ஓர் அறிக்கை இதுவரை சட்டத்தின் கரத்தில் சிக்காதிருந்துவரும் நாஸி யுத்தக் குற்றவாளிகளைப்பற்றிக் கூட்டாக விசாரணை நடத்தும் பொருட்டு மேற்கு ஜெர்மனியின் சட்டஇலாகா ஜெர்மன்ஜனநாயகக் குடியரசின் சட்ட அதிகாரிகளுடன் இனிமேலாவது பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது.

# கடற்றெழிலாளர் குறைபாடுகள்

## தீர்க்க அரசாங்க அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணப்பகுதி கடற்றெழிலாளர் குறைபாடுகளை ஆராயுமுகமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா ஒரு மகாநாட்டைக் கூட்ட இருக்கிறுர். இதில் கலந்து கொள்வதற்கு மீன்பிடிக் கூட்டுத்தாபன உதவி மனேஜர் திரு. திருபாலசிங்கம், மாவட்டத் தொழிற்பரிசோதகர் திரு. தங்கராசா, துறைமுகத் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் திரு. எஸ். எவ் சிக்மலிங்கம், வடமாகாணக் கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் அழைக்கப்பட்டிருக்கிறுர்கள்

சூறுவளி நஷ்டஈடு, [illegible] வலைத் தொழிலாளர் [illegible] ளுகள், வலைத் தட்டுப்பாடு, இயந்திர உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு, தங்குதுறை வசதிகள், சங்கு ஏற்றுமதி, யாழ். மாவட்டத்துக்கு மீன் விற்பனைத் திட்டம், குளிர் சாதன வசதிகள் போன்ற விஷயங்கள் மேற்படி மகாநாட்டில் ஆராயப்பட இருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்கள் பலவும் இம்மகாநாட்டில் ஆராயப்படும்.

# குருபூசை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திருநாவுக்கரசர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

குருபூசையின்போது வித்துவான் க. கி. நடராசன் பேசுகையில். அப்பர் பாடிய தேவாரங்கள் இனிமையானவை; இலக்கியச்சுவை நிறைந்தவை. இலக்கிய ரசனையைச் சுவைக்கவிரும்பும் எவரும் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரங்களைப்படித்து இன்புறலாம். தேவாரப்பாடல்களைப் பண்ணேடு படித்தால் மட்டும் போதாது. அவற்றிலுள்ள பொருளையும் விளங்கிக் கொள்ளவேண்டும்'? என்று குறிப்பிட்டார்.

வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை' க. சிவராமலிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினுர்கள்.

# உள்ளூரில் தீந்தை தயாரிப்பு

கொழும்பு, திங்கள்

உள்ளூரில் தீந்தை தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்தியாளருக்கு இதற்கான மூலப்பொருட்களை இறக்குமதிசெய்வதற்குத் கைத்தொழிலமைச்சு 60 லட்சம் ரூபாவுக்கான அந்நியச் செலாவணி அனுமதியளிக்க இருக்கிறது.

# தமிழ்-போத்துக்கீச ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துக்கீசத்திலிருந்து தமிழுக்கு வந்திருக்கின்றன பேராசிரியர் ஞோல்டன் கூறுகிறுர். அவற்றுள் சில: அக்கப்பாடு, ஆதிருப்பள்ளி, அலப்புனெத்தி (ஊசி), அம்பர், அன்னமுன்னு (பழம்), அப்போஸ்தலன், அலமாரி, இறூத்தல் (நிறை), அந்தா (பழம்), அக்குத்து, வாங்கு (ஆசனம்), விஸ்கோத்து, பொத்தான், கம்பாயம், சவ்வாது, காப்பி (கோப்பி), கமிசு (மேலங்கி) சாயா (தேயிலை), குசினி (அடுக்களை), தோசை, கிறுதி, இலாக்கிரி (மெழுகு), இலாந்தர் (விளக்கு), இலேஞ்சி (கைக்குட்டை), நத்தார், பப்பாசி (பழம்), வட்டக்கய், பேனை, பீப்பா, இறையால் (நாணயம்), உருளோசு (கைக்கடிகாரம்), ரேந்தை (பின்னல் துணி), ரோஜா, சப்பாத்து, தீந்தை (மை), துவாலை (துவாய்), விருந்தை.

போத்துக்கீசத்திலிருந்து பிறந்த இன்னும் பல தமிழ்ச் சொற்கள் பிரதானமாக யாழ்ப்பாணத்தில் ஆராய்ச்சி செய்யப்படாமலிருக்கின்றன.

# திட்ட அமைச்சு ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

வருடாவருடம் தொழிலாளர்க சேர்க்கப்படுவவதை சுமார் 3 சத வீதம் உயர்த்திக்கொள்ளுமாறு முதலாளிமாரகளைக் கட்டாயப்படுத்தவேண்டுமென தொழில், வேலைவாய்ப்பு வீடமைப்பு அமைச்சு செய்துள்ள சிபார்சுக்கு திட்ட பொருளாதார அமைச்சு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இறக்குமதிக் கட்டுப்பாடு கடுமையாக இருப்பதால் கடந்த மூன்று நான்கு வருடங்களில் கைத்தொழில் நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இதனுல் இந்த நிலையங்கள் நஷ்டத்தைத் தடுக்க குறிப்பிட்ட அளவு தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், இவ்வித சூழ்நிலையில் வேலையாட்களை அதிகரிக்கும்படி முதலாளிகளை வற்புறுத்துவது பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்காது என்வும் திட்ட அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது,

# பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், செவ்.

பாஷையூர் அர்ச் அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்து பல சமூகத் தொண்டுகளில் உழைத்த சில்லாலை கட்டளைக்குரவர் ஏ வசம்பக் ஓ எம் ஐ தாயகமான ஹாலந்துக்கு திரும்புவதை முன்னிட்டு மேற்படி கழக உறுப்பினரால் பிரியாவிடை வைபவமொன்று நடாத்தப்பட்டது.

# புதிய கர்ப்பத் தடை மருந்து

பெர்லின், மே 16

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் பிரபலமான ஒரு மருந்துத் தயாரிப்பு நிறுவனம் ''ஒலோசிஸ்டன்'' என்ற பெயரில் ஒரு புதிய கர்ப்பத்தடை மாத்திரை கண்டுபிடித்துள்ளது. வைத்திய அதிகாரியின் சிபார்சின்மீதே மருந்துக்கடைகளில் இது விற்கப்படுகிறது. ஐந்துக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுள்ள தாய்மார் இதனை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# லண்டன் பயணம்

சுழிபுரம், திங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் [illegible] கடமையாற்றிய சற்குணராசா வைத்திய சம்பந்த மான [illegible] கல்வி கற்பதற்கு லண்டனுக்குப் பயணமானார்.

# புதிய ரக அகராதி

பெர்லின், மே 16

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தானிய ஆராய்ச்சிக் கழகம் 16 மொழிகளில் ஓர் அகராதியை வெளியிட்டுள்ளது. இம் மாதம் 22ந் தேதி முதல் 27ந் தேதிவரை வீயன்னுவில் நடைபெற இருக்கும் சர்வதேச தானிய மாநாட்டையொட்டியேஇந் நூல் வெளியிடப்பட்டுள்ளது. தானிய-ரசாயனம், தானியம் பாதுகாத்தல் முதலியவை சம்பந்தப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட விசேஷ சொற்களும் இதில் அடங்கியுள்ளன.

இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் சுமார் 2000 பேர் கலந்து கொள்வர். ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு 30 பிரதிநிதிகளை இம்மாநாட்டுக்கு அனுப்புகிறது.

# மந்திரியின் கோரிக்கை

கொழும்பு. திங்கள்

சிறு நீர்ப்பாசன வேலைகளை கிராமங்களில் சிரமதானமூலம் செய்வதற்கு மகாசங்கங்களிடமிருந்து காணி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா உதவி கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

சூழ்நிலையும், சந்தர்ப்பமும் இராமுவைச் சதிசெய்த போதிலும், அவன் மனதில் தொங்கும் நப்பாசையில் நம்பிக்கை வைத்துக் கொண்டுசென்றுகொண்டேயிருந்தான். "இந்த ஆறு கட்டைக்கிடையில் ஏதும் குச்சு வீடாவது ஒண்டிக் கொள்ள இல்லாமலா போய்விடும்?" என்ற எண்ணம் அவனைத் தைரியமூட்டியது.

விநாடிகள் நிமிடங்களாக மாற, இருள் அரக்கன் கடுமை என்ற போர்வையை விரிக்கத் தொடங்கினான். மெதுவாக இராமுவின் உள்ளத்தில் நம்பிக்கை தேயத் தொடங்கும் சமயத்தில். குருடனுக்குப் பார்வை கிடைத்ததுபோல தொலைவில் ஒரு மங்கிய வெளிச்சம் ஒன்று அவன் பார்வையில் முட்டி மோதிற்று.

பரம தரித்திரனுக்கு லட்ச ரூபாய் 'லாட்டரி' அடித்த மகிழ்ச்சிபோல் துள்ளிக் குதித்துக்கொண்டே துவிச்சக்கரத்தை சிறிது வேகமாக மிதித்தவாறு அவ் வெளிச்சத்தை நோக்கி விரைந்தான்.

அவன் தொலைவில் தெரிந்த வெளிச்சத்தை சமீபிக்கச் சமீபிக்க அவ்வெளிச்சம் ஒரு வீட்டில் இருந்து வெளிவருவதை உணர்ந்துகொண்டான். அந்த நடுக்காட்டில் ஒரு வீடு? அதை அவனால் சில நிமிடங்களாகக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாமல் இருந்தது!... ஆனால் அவர்கள் முன்னே, வீடு அல்ல, ஒரு பெரிய பழைய பங்களாவே தோன்றியதைக்கண்டபொழுது அவன் ஆச்சரியமடையத்தான் செய்தான்.

பாதையின் முனையோடு பங்களாவின் எல்லைச்சுவரும் "கேட்"டும் இருந்தது. சுவரிலிருந்த சிமிட்டி இற்றுப்போய் செங்கற்கள் வெளியே துரித்துக்கொண்டிருந்தன. கேட்டில் ஏதோ பெயர் பொறித்திருந்தது. இருட்டு நேரமாதலால் அவனால் துவிச்சக்கரவண்டியில் நின்றுகொண்டே பங்களா கேட்டில் பொறித்திருந்த பெயரை வாசிக்கமுடியவில்லை. துவிச்சக்கரவண்டியிலிருந்துஇறங்கி அதை பங்களாவின் எல்லைச் சுவரில் சாத்திவிட்டு அருகில்சென்று கூர்ந்து பார்த்தான்.

அதில், 'சோலைவனம் எஸ்டேட்' 'உரிமையாளர் டாக்டர் மோகன்' எனப் பொறிக்கப்பட்டிருந்தது!

(தொடரும்)

நமது விஞ்ஞானம்

# பாம்பு விஷம்

— தெ. சந்திரகுமாரன் —

பாம்பு விஷமுடையது. அவ்விஷம் உயிரைக் கொல்லும் தன்மையது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அந்த விஷம் எவற்றாலாக்கப்பட்ட [illegible]பதும், அதன் வேறு [illegible]மைகளும் பலருக்கும் [illegible]ரிந்திருக்காது.

பாம்பின் விஷம் மற்ற விஷங்களிலும் வேறுபட்டது. இது புரதப் (Proteins) பொருள்களான சிக்கல் நிறைந்த பொருளாகும். பாம்பின் நஞ்சு பொதுவாக நிறமற்றதாயினும், சிறிது மஞ்சள்கலந்த நிறமென்றே கூறலாம். பாம்பினின்று எடுக்கப்பட்ட நஞ்சு முறைப்படி பாதுகாக்கப்பட்டால் பல ஆண்டுகள் சென்றாலும் அதன்வீரியம் குறையாமல் இருக்கும். உலர்ந்த விஷம் நீர், சாராயம், கிளிசரின் ஆகியவற்றில் எளிதாக இது கரைகிறது. விஷமானது ஒருவனுடைய உடம்பிற் சென்றதும் இரண்டாகப் பிரிந்து தொழிற்படுகிறது. முதலாவது பிரிவு உடம்பிலுள்ள நரம்புகளைத்தாக்க, இரண்டவது பிரிவு இரத்தத்தையும், இரத்த ஓட்டத்தையும் தாக்குகிறது. நாகபாம்பு கோரல், மெர்காசின், கடற்பாம்பு ஆகியவற்றின் விஷம் நரம்பைக் கடுமையாகத் தாக்கும் சக்தியுடையன.

பாம்பின் விஷங்களிலே போத்ரோப்ஸ் (Bothropa) என்ற பாம்பின் விடம்தான் மிகக்கொடியது இந்தப் பாம்பு பிரேசில் நாட்டிலே தான் அதிகம். விஞ்ஞானிகள் இப்பாம்பின் விடத்தின் தன்மையைக் குறைத்து மனித இனத்தின் நலத்திற்குப்பயன்படும் வகையில் செய்முறையில்மாற்றியுள்ளனர்.

நாகபாம்பின் நஞ்சு பல்வேறு வழிகளில் உபயோகப்படுகின்றது. அது பல்வலி, பல்ஈறில் வலி: நரம்பு வலி முதலிய வியாதிகளைக் குணமாக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. பாம்பின் விடம் புற்றுநோயையும் குணப்படுத்துமென்று கண்டுபிடித்திருக்கிறார்களென்றால்...... பாருங்களேன்!

## மனித வாழ்க்கையில் விஞ்ஞானம்!

- த. இந்திரலிங்கம் -

இன்றைய நவ நாகரிக உலகம் விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைந்து வழங்குகின்ற காலமாகும். 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்ற வாக்கு விஞ்ஞானத்துறையிலே, கொலுவீற்றிருக்கவேண்டிய வாக்கு இதையே அரிஸ்டோட்டலும் 'முயற்சியுடையார்க்கு எதுவும் அரிதில்லை' என்று கூறினர்.

நம்முன்னே வாழ்ந்த விஞ்ஞானிகள் தாம் கொண்ட கனவுகளைக் [கண்டுபிடிக்கக் கூடிய கருவிகளைப்பற்றிக் காலம் முழுவதும் சிந்தித்தார்கள். எதிரிலே காணும் எந்தப் பொருள்களையும், தம்முடைய விஞ்ஞானக் கனவுகளுடன் இணைத்துப் பார்த்தார்கள் விடாமுயற்சியுடன் தங்கள் இலட்சியத்தைநோக்கி ஏறுநடைபயின்றார்கள். முடிவு..... பிறந்தது புதுக்கண்டுபிடிப்பு! வெற்றிபெற்றது அவர்களது இலட்சியம்]

ஒருவனது இலட்சியம் வெற்றிபெறவேண்டுமானால் முதலிற் திட்டம்வேண்டும், திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஊக்கமும், முயற்சியும் இன்றியமையாதவை. ஒரு இயந்திரம் இயங்க எரிபொருள் எவ்வளவு அவசியமோ, அதேபோல ஒருதிட்டம் செயல்பட ஊக்கமும், முயற்சியும் இன்றியமையாதவை.

'ரைட் சகோதரர்கள்' ஆகாய விமானத்தைக்கண்டுபிடித்தார்கள்! பறவையைக் கண்ட அவர்கள் தங்கள் மதிநுட்பத்தினால் வானத்திலே பறந்தார்கள். பலமுறை அவர்களது முயற்சிகள் தோல்வியுற்றபோது மக்கள் அவர்களை '[illegible] பறக்கிறான்' என்று கேலி செய்தனர்.

# மாணவர் மலர்

விஞ்ஞானப் பெரியார்கள்

## கலிலியோ

-வே. கோபாலசுந்தரம்-

இவர் இத்தாலியில் 1564-ம் ஆண்டு பிறந்தார். அவர் இளவயதிலேயே வறுமையால் கஷ்டப்பட்டவர் ஆயினும் பாடுபட்டுக் கல்வி கற்றார். 1581-ம் ஆண்டு சர்வகலாசாலைக்குள் நுழைந்தார். ஆனால் வைத்தியப் படிப்பில் மனம் செல்லவில்லை. கணித சாத்திரத்தையே விரும்பினார். அந்நாட்களில் 'ஆக்கிமீடிஸ்' என்ற விஞ்ஞானப் பெரியாரின் நூலகளைக் கற்றார். அதன்பயனாக ஒரு தராசுவைக் கண்டுபிடித்தார், அதன் பின் ஊசலைக் கண்டுபிடித்தார். தான் கல்விகற்ற கலாசாலையிலேயே கணித போதகாசிரியராக 1588-ம் ஆண்டு பதவிவகித்தார். 'சகல பொருட்களும் ஒரே நேரத்தில் இருந்து விழுந்தால் ஒரே உயரத்திலிருந்து விழுந்தால் ஒரே சமயத்தில் ஒன்றாகவே வந்து சேரும்' என்ற உண்மையை பரிசோதனையைச் செய்து நிரூபித்தார். 1609-ம் ஆண்டு தூர திருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்தார். இக் கண்ணாடி மூலம் சந்திரமண்டலத்தை ஆராய்ந்தார். பின்பு சூரியனை தமது கண்ணாடி மூலம் ஆராய்ந்த போது சூரியனைச்சுற்றி கிரகங்கள் ஓடுவதுபோல வியாழனைச்சுற்றியும் கிரகங்கள் ஓடுகின்றன என அறிந்தார். இதன்பின் சூரியன் பூமியைச்சுற்றவில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது. என்பதைக்கண்டார்.

1632-ம் ஆண்டு 'இரண்டு பிரதானமான உலகங்களின் சம்பாஷணை' என்ற நூலை வெளியிட்டார். இவ்வெளியீட்டின் பயனாக குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தப்பட்டார். 1636-ம்ஆண்டு 'நவீன விஞ்ஞானசம்பாஷனை' என்ற நூலை வெளியிட்டார். இதன் பின்னர் அவர் தன்கண்ணை இழந்தார். கலிலியோ மெலிந்து எலும்புந்தோலுமாய் விட்டார். 1642-ம் ஆண்டு தைமாதம் 8-ம் திகதி 78 வது வயதில் அமரருலகு அடைந்தார்.

## மைந்தனுக்கு

மகனே!

எங்கள் வீட்டிலுள்ள இலுப்பையும் வேம்பும் மாமரமும் பழைய இலைகளைக் களைந்தெறிந்துவிட்டு புதிய மென்தளிர் விட்டுப் புதுக்கோலம் பூணுவதைப் பார்த்தாயா?

இது இளவேனிற்காலம். இயற்கை முழுவதும் பழையன கழிந்து புதியன புகும் புனிதமான பொற்காலம். நீ ஒவ்வொரு நாளும் அதிகாலையில் துயில்நீங்கி எழுந்திருந்து இயற்கையின் எழில்களைப் பருகவேண்டும்.

கிழக்கு வானில் ஒரு பெரிய தாமரைபோல் ஜொலிக்கும் நட்சத்திரத்தைப் பார். அது தான் வெள்ளி அல்லது சுக்கிரன். ஊரில் அதை விடிவெள்ளி என்றும் கூறுவர்.

பூங்குயில்களின் ஆரவாரத்தைக் கேட்டாயா? புது மலரில் மொய்க்கும் வண்டினங்களின் ரீங்காரத்தைக் [illegible] காற்று மரக்கிளைகளில் இரகசியம் பேசுவதைக் கேட்டாயா? இவையெல்லாம் கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஆனந்தங்கள். அவற்றை நாம் பார்த்தும் கேட்டும் போந்தும் ரஸிக்க வேண்டும்.

கோடிகோடி இன்பம் தந்த இறைவனை நினைந்து போற்று. நீ வாழ்க!

இப்படிக்கு
உன் அப்பா

## அறிவுச் செல்வம்

யானைக்கு உள்ள துதிக்கையில் நாற்பதினாயிரம் நரம்புகள் இருக்கின்றன. (40000)

ஒரு பறவைக்கு இருக்கும் இறகுகளின் எண்ணிக்கை இரண்டாயிரம். (2000)

மனிதன் நிமிடத்துக்கு 30 தடவை கண் சிமிட்டுகிறான்.

கானரி என்னும் பறவைக்கு இருதயம் ஒரு நிமிடத்துக்கு ஆயிரம் தடவை துடிக்குமாம் (1000)

மனிதனுக்கு உள்ள நரம்புகள் தொகை ஐநூற்று இருபத்தேழு. (527)

தொகுத்தவர்: எம். புளோரம்மா பெர்னண்டோ, சின்னக்கடை மன்னார்.

ஃ

முட்டையிட்டவுடன் இறக்கும் பூச்சி பட்டுப் பூச்சியாகும்.

கருக்கொண்டவுடன் இறக்கும் பூச்சி தம்பலப் பூச்சியேயாகும்.

ஆயிரம் மைல் பறக்கக் கூடிய பூச்சி வெட்டுக்கிளி.

வெண்கலத்தை வெட்டக் கூடிய பிராணி தேள் ஆகும்.

மணித்தியாலத்திற்கு கறையான் மூவாயிரம் முட்டைகள் இடும்.

இறகு இல்லாமல் பறக்கும் பூச்சி பறக்குஞ் சிலந்தி ஆகும்.

இறகு இல்லாத பெரிய பறவை கிவி.

அடைகாக்கும் ஆண் பறவை தீப்பறவை ஆகும்.

தொகுப்பு: குமார்சந்திரன், மல்லாகம்.

## சிரி... சுவை

திருடன்: ம்... பணப்பர்சையும் றிஸ்ட்வாட்சையும் கொடுத்துவிடு. இல்லையேல் பிணமாவாய். (கத்தியை காட்டிப்படியே.)

சாஸ்திரியார்: ஹீம். 'இன்று தரமுடியாது.

திருடன்: ஒய் சாஸ்திரியே! ஏன் 'இன்று' தர முடியாது என்கின்றாய்.

சாஸ்திரியார்: இன்று பஞ்சமி, கரிநாள், இரவுமாகி விட்டது. காலம் சரியில்லை. அதனால் தரமுடியாது!

ஃ ஃ ஃ

ஒ வர்: என்னண்ணை! உங்கள் மீசை கூந்தல் அளவு நீளத்திற்கு வளர்ந்து விட்டதே!

மற்றவர்: ஒமொடா தம்பி. மீசை வளரவில்லை என்று கூந்தல் தைலத்தை எடுத்து பூசிவிட்டேன். அது தான்...

ஃ ஃ ஃ

இன்ஸ்பெக்டர்: என்ன 213; அத்திருடனை விலங்கு போட்டுப் பிடிச்சிட்டியா?

கான்ஸ்டபிள்: இல்லை சார். நான் விலங்கை என் பாக்கெட்டினுள் வைத்திருந்தபடி அவனைத் தேடினேன் அந்த பிட்பாக்கெட் திருடன் அவ்விலங்கையே 'பிட்பாக்கெட்' அடிச்சிட்டு ஓடிட்டான்!

ஃ ஃ ஃ

"புன்னகைதாஸ்"
பருத்தித்துறை.

அடுத்த
"மாணவர் மலர்"
17-5-66-ல்
வெளிவரும்.

## விவாத மேடை: 2

அறிவு வளர்ச்சிஇருக்கத்தான் வேண்டும். அதனால் நன்மையும் அடையலாம். அதே வேளையில் இயற்கையின் விளைவால் தீமைவந்தாலும் பொறுக்கும் ஆற்றல் எமக்கு இருக்கின்றதா? அப்படி இல்லாதவர்கள் இவற்றில் தலையிடுவதுகூடாது கடவுளால் ஆக்கப்பட்டவர்கள் நாங்கள். ஆனபடியால் அப்பரம்பொருளுக்கு மேலான ஒரு காரியத்தையும் செய்ய முற்படக்கூடாது. பகல் முழுவதும் கொடிய வெயிலிலே வாழும் எமக்குத் தண்ணொளிவீசி ஆறுதலளிக்கும் சந்திரனுக்கு இவ்வித விஞ்ஞானப் பிரயாணத்தினால் ஏதும் தீமை விளைய நேரிட்டால் அத்தீமையின் பயனையும் ஏற்கக்கூடிய பொறுப்பு எம்மைச்சார்ந்ததே.

—என். ஜெகதீஸ்வரி,
யாழ்ப்பாணம்'

ஃ

நவீன வசதிகள் பெருகி வரும் தற்காலத்தில் சந்திர மண்டலத்திற்குச் செல்வதற்கு அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் முயற்சி எடுப்பது வியப்பில்லை. எனினும் இவ்வுலகில் உள்ள குறைகளுக்கெல்லாம் நிறைவைப் பூரணமாகக் கண்ட பின்தான் பூரண சந்திரனில் வசிக்கும் முயற்சியில் இறங்கவேண்டும். நிலஉலகில் செய்யவேண்டிய சுகாதாரச் சீர்திருத்தங்கள் அரசியற் சீர்திருத்தங்கள் பொருளாதார சீர்திருத்தங்கள் எத்தனையோ இருக்கின்றன இவற்றுக்குமுதலில்வழி கண்டபின் சந்திர மண்டல வழியைக் காண முயலலாம்.

ராஜேஸ்வரி -
தில்லையம்பலம்
திருநெல்வேலி.

ஃ

ஆறறிவு படைத்த மனிதனது ஆசைகள் அளப்பரியது. கடலினுள் பாயும் மீனினைக் கண்டு படகைச் செய்தான். வானில் பறக்கும் பறவையைப் பார்த்து விமானம் படைத்தான். இப்படியாக இயற்கையான எத்தனையோ இயல்களைக் கண்டு அவன் படைத்தவை ஏராளம்.

சந்திர மண்டல பிரயாணத்தினால் கேடுகள் விளையும். தீமைகள் உண்டாகும் என சிலர் அஞ்சுகின்றனர். அது வெறும் கற்பனையே. சந்திர மண்டல ஆராய்ச்சியினால் தீது உண்டெனினும் நன்மைகள் அதிகமுண்டு.

குண நடராஜா
சித்தங்கேணி

ஃ

வனவிலங்குகளுடன்விலங்காக அறிவிழந்து தடுமாறி அவல வாழ்வெய்தி வந்த ஆதிமனிதனுக்கு விஞ்ஞானம் தேவைப்படவில்லை. காலப்போக்கிலே சிந்தனை அவனிடம் குடிகொண்டது. அச்சிந்தனையின் அப்பட்டமான பிரதிபலிப்பின் தோற்றமே இன்றைய இருபதாம் நூற்றாண்டு. இன்று எமது வாழ்க்கையிலே விஞ்ஞான கருவிகளும், கண்டுபிடிப்புகளும் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றது. அதனைத் துறந்து வாழவேமுடியாது,

நெருப்புத் தணலாக உள்ளது சந்திரன்என்று சொல்பவரின் பிற்போக்குக் கொள்கைகளைப் பிய்த்தெறிந்து அதுவும் பூமியைப் போல ஒரு கிரகமே என்பதைத் தெட்டத்தெளிவாக நிருபிக்க முடிந்ததும் விண்வெளிப் பிரயாணத்தின் பயனே!

அ. நஜுமுத்தீன்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ் யாழ் மாவட்டமென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சில கிரிக்கெட் போட்டி முடிவுகள் வருமாறு:

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் 'டெயிலிமிறர்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியின் முதல் இனிங்ஸில் அரியாலை கோஷ்டி 64 ஓட்டங்களும், டெயிலிமிறர் கோஷ்டி 39 ஓட்டங்களும் பெற்றன. 2-வது இனிங்ஸில் டெயிலிமிறர் கோஷ்டி துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி முடிவில் அரியாலைக் கோஷ்டி இனிங்ஸால் வெற்றியீட்டியது.

### யங்லயன்ஸ் வெற்றி

ரேயல் விளையாட்டுக்கழகத்துக்கும் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ரேயல் முதலாவது இனிங்ஸில் 32 ஓட்டங்களைப் பெற்றது, இவ் ஆட்டத்தில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் 96 ஓட்டங்களைப் பெற்றது.

2.வது இனிங்ஸில் ரேயல் விளையாட்டுக்கழகம் துடுப்பெடுத்தாடி 27 ஓட்டங்கள் பெற்றது. இப்போட்டி முடிவில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் இனிங்சால் வெற்றியீட்டியது.

### அரியாலைவெற்றி

நீராவியடி விளையாட்டுக் கழகத்துக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக 'சி' பிரிவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதல் இனிங்ஸில் அரியாலை சகல விக்கட்டுகளையும் இழந்து 65ஓட்டங்களைப் பெற்றது. நீராவியடி கோஷ்டி 29 ஓட்டங்களைப்பெற்றது. 2-வது இனிங்ஸில் அரியாலை 37ஓட்டங்களும் நீராவியடி38 ஓட்டங்களும் பெற்றன. இப்போட்டி முடிவில் அரியாலை 35 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

### யங்லயன்ஸ் வெற்றி

யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 'எ' பிரிவுக்கும் அலோசியஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில், யங்லயன்ஸ் முதல் இனிங்ஸில் 83 ஓட்டங்களும், அலோசியஸ் 54 ஓட்டங்களும் பெற்றன. 2-வது இனிங்ஸில் யங்லயன்ஸ் 33 ஓட்டங்களும், அலோசியஸ் 29 ஓட்டங்களும் பெற்றன. இப்போட்டி முடிவில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் 33ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிகள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றன.

## ஜூன் மாதத்தில் தேர்தல்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபை பொதுத்தேர்தல் ஜூன் மாத முற்பகுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட பிரிவில் நாலு உள்ளூர் மன்றங்களின் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்டு தேர்தல் நடைபெறவிருந்த நேரத்தில் அவசரகால நிலைமை காரணமாக தேர்தல்கள் பிற்போடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## 'வள்ளுவர் தினத்தை கொண்டாடுக'

சுழிபுரம், திங்கள்

அகில இலங்கை தமிழ் மறைக் கழகத்தின் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் இவ்வாண்டு ஜூன்மாதம் 2-ம் திகதியை வள்ளுவர் தினமாக கொண்டாடும்படி வேண்டியுள்ளார். இத்தினத்தை ஒவ்வோர் இடங்களிலுமுள்ள பாடசாலைகள், கழகங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஆகியன மிகவும் விரிவாகக் கொண்டாடும்படி மேலும் கேட்டுள்ளார். தமிழ்நாடு அரசாங்கம் அன்றைய தினத்தை விடுமுறை தினமாக பிரகடனம்செய்துள்ளது.

## புளூஸ் வெற்றி

உடுப்பிட்டி, திங்கள்

சமரவாகு அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலை மைதானத்தில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த கோஷ்டிக்கும் வல்வெட்டித்துறை 'புளூஸ்' கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் மூன்று ஆட்டங்களையும் எடுத்து மகத்தான வெற்றியை வல்வை 'புளூஸ்' தட்டிக் கொண்டது.

## திருக்குறள் போட்டி

சுழிபுரம், திங்கள்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் நடாத்தும் சமாஜவிழாவின் திருக்குறள் மனப்போட்டி, கட்டுரை எழுதல் போட்டி அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றது.




## கொழும்பு

செவ். 17-5-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல், 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 திரைஇசை, 1-00 கதம்பஇசை,

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15வளரும் பயிர், 5-45 இசைமெட்டு,

இரவு 6-15 கிராமச்சஞ்சிகை, 6-45 வீணை—சத்தியவதி ராசு, 7-15 பேச்சு, 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம்- எஸ். எஸ், அப்புலிங்கம் பிள்ளை, 10-00 நேயர் விருப்பம்.

# ஜி. ஜி. - செல்வா மோதல் பற்றி சிங்கள தினசரி

கொழும்பு, திங்கள்

'ஜனதின' என்ற சிங்கள தினசரி பின்வரும் தலையங்கத்தை இம்மாதம் 13-ம் திகதி வெளியான தன் பத்திரிகையில் எழுதியுள்ளது.

'தற்பொழுது செல்வநாயகம்பொன்னம்பலம்சொற்போர் அரசியலில் ஒரு பெரும் பிரச்சனையாகி விட்டது. 1948 - 56-ம் ஆண்டு ஒப்பந்தங்களை முதலாளித்துவ பத்திரிகைகள் கூட மறைத்து வைத்திருக்க தவறி விட்டார்கள் என்ற திரு. செல்வநாயகம் ஒரு பகிரங்கக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் பிரதமருக்கு ஒரு பெரும் பொறுப்புண்டு. இரண்டு தமிழ் தலைவர்களிடையேயும் ஏற்பட்டுள்ள மோதல் எவ்வாறு பொது மக்களை பாதிக்கின்றதென்பதையும் இதனுல் எதிர் காலம் எவ்வாறு அமையும் என்பதையும் இவ் நெருக்கடியை பிரதமர் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதையும் பிரதமர் பொது மக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

# 'நெசவாலைகளினுல் வேலைவாய்ப்புக்கிடைக்கும்"

பருத்தித்துறை, திங்கள்

"படித்த வாலிபர்கள் குடிசைத்தொழில், விவசாயம் ஆகியதுறைகளில் ஆர்வமுடன் ஈடுபடுவதே இன்றைய நிலையில் சிறந்ததும் பொருத்தம் உடையதுமாகும். அரசாங்க உத்தியோக மோகம் எமக்கு வாழ்வைத் தராதுவிடுவதுமட்டுமன்றி அடிமை மனப்பான்மையையும் வளர்த்துவிடும்."

இவ்வாறு பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் நெல்லண்டையில் புதிய நெசவாலைக்கான கட்டடத்துக்கு அஸ்திபாரம் இடப்பட்ட வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், இன்றைய திட்டப்படி நெசவாலைகள் நிறுவுவதன் மூலம் பலர் பயிற்சிபெற வாய்ப்பளிப்பதுடன் வேலைக்கான வாய்ப்புடன் கிராமாந்தர ரீதியில் பொருளாதாரமும் பலமடைய உதவியளிக்கும் என்றுர்.

நெசவு நிலையங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டால் கணிசமான அளவுக்கு சுயதேவைப் பூர்த்தியும் சாத்தியமாகலாம் என்றும் அவர் கூறினுர்.

### உடுப்பிட்டியில்

"தமிழர்கள் நெசவுக் கலையில் சிறந்து விளங்கினுர்கள் என்று சங்க இலக்கியங்க கூறுகின்றன. இக்காலத்தில் நெசவுத்தொழில், படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கும், வனிதையர்க்கும் எவ்வளவோ உறுதுணைபயக்கிறது. உள்நாட்டு உடைகளின் உற்பத்திப்பெருக்கம் மிகவும் அவசியம். அரசாங்கமும் உள்ளூர் உற்பத்தியில் அதிக நாட்டம் செலுத்தி

(8ம் பக்கம் பார்க்க)







## தேசியப்பற்று உடையவராயிருங்கள்

நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்

# குண்டசாலை அரிசியை

சாப்பிடுங்கள்.

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.

ஏனென்றுல் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

கொழும்பு விநியோகஸ்தர்:

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி

181, பழைய சோனக தெரு, கொழும்பு—12

தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கண்டி விநியோகஸ்தர்:

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.

கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:

செரல் புறடக்ட்ஸ் உற்பத்தி ஆலை

குண்டசாலை, குருதேனியா.

தொலைபேசி: 808



## தரமான மொறட்டுவை வீட்டுத் தளவாடங்கள்

தரமான தளவாடங்களுக்கும், நியாயமான விலைக்கும் எம். எஸ். பெர்ணுண்டோ அன் கொம்பனி பிரசித்திபெற்றது.

இந்தப்பருவத்தில் விற்பனையாகும் பொருட்கள் ஒன்றுதான் கீழே காட்டப்பட்டுள்ளது.

முதல்தர பர்மா தேக்கினுலான ஸபிரிங் கட்டில் ருபா 245-00

இரண்டாந்தர பர்மா தேக்கினுலான ஸெட்டின்ஸபிரிங்கட்டில் ருபா 175-00

(முதல்தர ஸ்பிரிங் இணைக்கப்பட்டது)



விருந்தை முதல் சமையலறை வரைக்கும் உங்கள் சகல வீட்டுத் தேவைக்குமான தளவாடங்களும் எங்களிடம்உண்டு. தரம், வேலைப்பாடு, விலை ஆகியவற்றில் உத்தரவாதம்.

எம். எஸ். பெர்ணுண்டோ அன் கம்பெனி

110, காலி வீதி, மொறட்டுவை

கிளைகள்:- இல. 4, இண்டிபெத்த, மொறட்டுவை.

இல. 32, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிறநாட்டு உதவியை எதிர்பார்ப்பது சரியல்ல'

மக்கோனு, திங்கள்

முந்திய அரசாங்க மந்திரிகளைப்போன்று, தேசிய அரசாங்க மந்திரிகளும், நாட்டின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தாது, பிறநாடுகளுக்கு உதவிபெறச் செல்கின்றனர்.

இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் முன்னுள் பிரதம நீதியரசர் திரு. ஹேமாபச நாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: கடந்த 19 ஆண்டுகளுக்குமுன்னுல் இலங்கை சுதந்திரமடைந்தது. ஆனுல் பதவிக்கு வந்த எந்த அரசாங்கமும் நாட்டின் அபிவிருத்தியில் அக்கறைகாட்டவில்லை. சுயதேவையை பூர்த்திசெய்யக்கூடிய அளவில் பொருளாதார அபிவிருத்தியில் கவனம்செலுத்தவில்லை.

உணவுப் பொருட்கள், துணிகள், இறக்குமதிக்காக ஏராளமான பணம், இந்நாட்டிலிருந்து வெளியில் செல்கின்றது. இப்பணத்தை வெளியேருமல் தடுத்து நிறுத்தாதவரை நாடுமுன்னேற்றமடையமுடியாது.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக சில முக்கிய திட்டங்கள் மந்திரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனுல் சில மந்திரிகள் இத்திட்டங்கள் பற்றி ஆலோசனை செய்வதில் அக்கறைகாட்டவில்லை.

மந்திரிமார்கள் தங்கள் பொதுமக்களின் பணியாட்கள் என்பதை உணரவேண்டும். இந்நாட்டின் ஏஜமான்கள் பொதுமக்களே.

மார்க்சிச வாதிகளுக்கு எதிராகவும், சர்வாதிகாரத்திற்கு எதிராகவும், மகாசங்கம் முக்கியநடவடிக்கைகளை எடுத்தது. அரசாங்கத்தின் முக்கிய பிரச்னைகள் சம்பந்தமாக, தேசிய அரசாங்கமும், மகாசங்கத்தின் ஆலோசனைகளைப் பெறுவதில்லை.

நாட்டின் நலன் கருதிக் கொண்டுவரப்படும் ஆலோசனைகளை அரசாங்கம் அலட்சியம் செய்தால் மகாசங்கம் பார்த்துக்கொண்டிருக்காது.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30,6-30,9-45க்கு
சிவாஜி—சாவித்திரி
நடித்த
அமரதீபம்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
ஆலயமணி

REGAL--JAFFNA
NOW SHOWING!
Victor Mature - Richard Burton
in
THE ROBE
(Cinemascope-Color)

## பிரயாணக் கப்பல் மூழ்கியது

மணிலா, மே16

பிலிப்பைன்சில் 250 பேரடங்கிய ஒரு பிரயாணக் கப்பல் மூழ்கிவிட்டது மேல் விபரங்கள் இன்னும் தெரியவில்லை,

## நெசவாலைகளினுல்.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. புதிதாக ஸ்தாபிக்கப்படும் இந்நெசவாலைகள் தமது அயராத உழைப்பினுல் உயர்ந்து உடுப்பிட்டித்தொகுதிக்கும், நாட்டுக்கும் பெருமைதேடித்தர வேண்டும்' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் கொற்ருவத்தையில் புதிய நெசவு நிலையத்துக்கு அடிக்கல்நாட்டுகையில் பேசினுர்.

வடமராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. என் பி. நவரத்தினராசா, கொற்ருவத்தை சமாதான நீதிபதி திரு. இ. சின்னத்தம்பி ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## கலைக்கழகத்திற்கு அரைக்கோடி பேர் விஜயம்

டிரெஸ்டன், மே 15

டிரெஸ்டனில் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) 1956-ல் கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபின்னர் அரைக்கோடி பேர் கலைக்கழகத்தைச் சென்று பார்வையிட்டுள்ளனர். சர்வதேசப் புகழ்பெற்ற ஓவியங்கள் இக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளன ஹிட்லரின் நாசிகளால் சுண்ணும்புக் கிடங்குகளில் வீசப்பட்டிருந்த கிடைத்தற்கரிய கலைச்செல்வங்கள் யுத்தம் முடிந்த பின்னர் மீட்கப்பட்டன. அவற்றில் பல டிரெஸ்டன் கலைக்கழகத்திற்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

## மந்திரியின் தீர்மானம்

அம்பாறை, திங்கள்

சம்மாந்துறை பட்டின சபையின் நிர்வாகம்சம்பந்தமான விஷயங்களை ஆராய்வதற்காக கமிஷனை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொள்ளப்போவதாக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் சம்மாந்துறை கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

ஜெமினி 9

## இன்று விண்வெளிக்கு அனுப்பப்படும்

நியுயோர்க், மே. 16

ஜெமினி 9 என்ற விண்வெளிக் கப்பலை நாளைய தினம் கென்னடி முனையில் இருந்து வான்வெளிக்கு செலுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டதாக இன்றுஅறிவிக்கப்பட்டது.

இக்கப்பல் சுமார் 71 மணி நேரம் பூமியைச்சுற்றி வலம் வரும். அச்சமயம் அதில் பிரயாணம் செய்யவிருக்கும் இருவரில் ஒருவர் கப்பலிலிருந்து வெளியில் வந்து விண்வெளியில் சில நிமிஷங்கள்வரை நடமாடுவார்.

## யாழ். மாநகரசபை அறிவித்தல்

மாநகரசபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலி ஆடு மாடுகள் பிடிப்போர் பதவிக்கானகாலி ஸ்தானங்கள்.

மேற்படி பதவிக்கானவிண்ணப்பங்கள், 18 வயதுமுதல் 25 வயது வரையுமுள்ள திடசாலியும் சுகதேகியுமான ஆண்களிடமிருந்து 1966-ம் ஆண்டு வைகாசிமாசம் 20-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேல்விபரம் காரியாலய நேரத்தில், மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(கட்சன் செல்வராசா)
மாநகர ஆணையாளர்
வேலைப்பகுதி
மாநகரசபை
யாழ்ப்பாணம்.
.5.66. 482

'இடதுசாரி தலைவர்களால்

# சிங்கள தமிழ் தொழிலாளர்களை ஒற்றுமைபடுத்த முடியவில்லை"

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களும்' சிங்கள மக்களும் சில காலமாகப் பிளவுபட்டிருந்தனர், இப்பொழுது ஒற்றுமையாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மக்கள் அரசாங்கம் தெற்கிலுள்ளவர்களையும், வடக்கிலுள்ளவர்களையும் ஒன்று சேர்த்து நாட்டிற்கு உழைக்க வழிசெய்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திஉயர் கலாமன்றத்தில் நேற்று முன்னம் மாலை நடைபெற்ற தேசியசேவையாளர்சங்க யாழ். கிளைக் கூட்டத்தில் பிரசாரகாரியதரிசி திருஎஸ். ஏ. ஜி. யாப்பா மேற்கண்டவாறு கூறினுர்.

திரு யாப்பா மேலும் கூறியதாவது: தொழில்சங்கங்கள் அரசியல் தொடர்பு அற்றதாக இருக்க வேண்டும். அரசியல் தொடர்பு அற்றதாக எமது சங்கம் இருப்பதால்தான், 12,000 பேர்கள் சேர்ந்துள்ளார்கள் இடதுசாரித் தலைவர்கள் தமது தொழிற்சங்கங்கள் மூலமாக, 21கோரிக்கைகளை முன் வைத்தனர், ஆனுல் ஒரு சில மாத காலத்தில் அவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் கோரிக்கைகளை கைவிட்டனர். இதிலிருந்துநாம் அறியக்கூடியது இடதுசாரித் தலைவர்கள் தொழிற்சங்கங்களை தாம் பதவிக்கு வருவதற்காக உபயோகித்தனர்.

25வருடகாலம் தொழிற்சங்கங்களைவழிநடத்தி வந்த இடதுசாரித்தலைவர்கள் சிங்கள-தமிழ்தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை அப்படியானவர்கள் உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள் என்ற கோஷத்துடன், அகில உலக தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்த முயற்சிப்பதில் அர்த்தமில்லை

மத்தகம பிரதிநிதி திரு. ஆர்.. எஸ். செல்லத்துரையும் பேசினுர்

உத்தியோகத்தர்கள் தெரிவு: தலைவர் திரு. கே. சி. பரமலிங்கம், உபதலைவர் திரு. ரி பத்மநாதன், கூட்டுச் செயலாளர்கள்: திருவாளர்கள் எஸ் சாமுவேல், ஆர் சிற்சபேசன், தனுதிகாரி திரு ஏ நல்லதம்பி, கமிட்டி அங்கத்தவர்கள் திருவாளர்கள் வி சச்சிதானநதன், ஏ மாசிலாமணி, எம் கதிரவேலு, எஸ் கந்தையா, ஆர் எப் டானியல், எஸ் கே செல்லத்துரை.

# மாட்டு வண்டிகளுக்கு ரப்பர் டயர்கள்

## கொழும்பு வீதிகளில் நடமாட நிபந்தனை

கொழும்பு, திங்கள்

கொழும்பு வீதிகளை உபயோகிக்கும் வண்டிகள் யாவும் இனிமேல் ரப்பர் டயர்களை உடையவைகளாக இருக்கவேண்டும் என்ற போக்கு வரத்து அமைச்சில் நடைபெற்றஉல்லாசப்பிரயாணம் சம்பந்தமான மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

வண்டிக்கு ரப்பர் டயர்கள் பொருத்தப்பட்டால் வீதிகளில் அவை எழுப்பும் சப்தம் குறைவதுடன் வீதிகள் பழுதாகாமலும் இருக்கமுடியும் என்று கருதப்படுகின்றது.

கொழும்பில் ஓடும் எல்லா வாடகைக்கார்களும் ஒரே நிறமுடையனவாக இருக்க வேண்டுமென்றும் பாதசாரிகள் வீதிகளில் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே கடக்கவேண்டு மென்றும் முடிவுகள் செய்யப்பட்டன.

மாட்டு வண்டிகளுக்கு 'லைசென்ஸ்' கோரப்படும்போது ரப்பர் டயர்கள் பொருத்தப்பட்டிருந்தால் தான் 'லைசென்ஸ்' வழங்க வேண்டுமென்று கொழும்பு முனிசிப்பல் சபையைக்கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிங்களக்கல்வி; பல்கலைக்கழகம்; கல்வி அறிக்கை

# முக்கிய பிரசனைகள் பற்றி தமிழரசு இன்று ஆராயும்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழரசுக்கட்சியின் செயற்குழு இன்று பருத்தித்துறையிலும் நாளை யாழ்ப்பாணத்திலும் கூடி முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசனைசெய்யவிருக்கிறது.

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கொண்டுவந்துள்ள கல்வி வெள்ளை அறிக்கை, தமிழ்ப் பேசும் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதுபற்றி எழுந்துள்ள கருத்துவேற்றுமை, தமிழ் பேசும்மக்கள் சிங்களம் படிப்பதுபோன்ற முக்கிய பிரச்னைகளைப்பற்றி செயற்குழு ஆலோசனைசெய்யவிருக்கிறது.

இன்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மற்றும் தமிழரசுக்கட்சி எம். பி. க்களுக்கும் வரவேற்பளிக்கப்பட இருக்கிறது.

## துறைமுக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தில் சமீப காலத்தில் தொழிலாளர்கள் ஒழுங்கானமுறையில் சேவை புரிந்துவருவது சம்பந்தமான அம்சங்களும் இப்படத்தில் சேர்க்கப்படுமெனத் தெரிகிறது.

## இரு கார்ப்பரேஷன்கள்

புதுடில்லி. மே 16

அகில இந்திய வானெலியையும், டெலிவிஷன்சேவையையும்தனித்தனிசுயேச்சை கார்ப்பரேஷன்களாக நடத்தவேண்டும் என சந்தா கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

இவற்றுக்கு இரு சுயேச்சையான கார்ப்பரேஷன்கள் அமைக்கப்படவேண்டும் என அது கூறியுள்ளது. சந்தா கமிட்டி அறிக்கை இன்று இந்தியப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. ராஜ்பகதூர் அறிக்கையை பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

பாங்ஹாக், மே 16

பாங்ஹாக்கில்நடைபெறும் ஆசிய நாடுகள் சம்பந்தமான டெலிவிஷன்ரேடியோ கருத்தரங்கில் இலங்கையும் பங்குபற்றுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org